இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 68 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 30 – செவ்வாய்க்கிழமை 17 அக்டோபர் 2023 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 68 : Thiruvalluvar Year - 2054 - Purattasi 30 - Tuesday 17 October 2023 - Dak 10 Pages ₹ 5.00

## இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# தமிழக மீனவர்களை உடனே விடுவிக்க வேண்டும்!

## ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, அக். 17 -**

**இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 27 மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், இந்திய மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில், இரு வேறு சம்பவங்களில் 27 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களது மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக முதலமைச்சர் அவர்கள் தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளார். கடந்த 14.10.2023 அன்று INDTNMM237, INDTN 10MM970, INDTN10MM56 மற்றும் INDTN10MM708 ஆகிய பதிவு எண்கள் கொண்ட 4 மீன்பிடிப் படகுகளில் சென்ற ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 23 மீனவர்களும், மற்றொரு சம்பவத்தில் INDTN11MM726 பதிவெண் கொண்ட விசைப் படகில் மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்களும், எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, அவர்களது மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### மீனவ மக்கள் அச்சம்!

தாம் ஏற்கனவே ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு எழுதியிருந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததுபோல, தொடர்ச்சியாக இதுபோன்று மீனவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களது மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்படும் சம்பவங்கள் மீனவ மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பியுள்ள மீனவர்கள் கைது செய்யப்படுவதால், மீனவ மக்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இதுபோன்ற சம்பவங்களால் மீனவ சமுதாயக் குடும்பத்தினருக்குப் பொருளாதார இழப்புகள் ஏற்படுவதோடு, இத்தொழிலை நம்பியுள்ள எண்ணற்ற குடும்பத்தினரின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

**மீனவர் கைது, படகுகள் பறிமுதல் போன்ற சம்பவங்களால் மீனவ சமுதாயக் குடும்பத்தினருக்குப் பொருளாதார இழப்புகள் ஏற்படுவதோடு, இத்தொழிலை நம்பியுள்ள எண்ணற்ற குடும்பத்தினரின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.**

### தூதரக அளவிலான நடவடிக்கை!

எனவே, உடனடியாக தூதரக அளவிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டு மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க இலங்கை அரசை வலியுறுத்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களை முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (16.10.2023) தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் நா.எழிலன், ஏ.ஜி.வெங்கடாச்சலம், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், அரசு துறைச் செயலாளர்கள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநர் கமல் கிஷோர், அரசு உயர் அலுவலர்கள், மாநில ஆலோசனை வாரியக் குழுவினுடைய மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு பணிகளின் நிபுணர்கள், மாவட்ட உறுப்பினர்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சங்கங்களின் உறுப்பினர்கள், அலுவல் சாரா உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## தேர்தல் பத்திரங்கள் தொடர்பான வழக்கு விசாரணையை

# அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றி உச்சநீதிமன்றம் உத்தரவு!

### தலைமை நீதிபதி அறிவிப்பு!

*புதுடெல்லி, அக். 17 -*

ஒன்றிய பா.ஜ.க. அரசு கடந்த 2018ஆம் ஆண்டு தேர்தல் நன்கொடை பத்திரங்களை அறிமுகப்படுத்தியது. ஆயிரம், 10 ஆயிரம், ஒரு லட்சம், 10 லட்சம், ஒரு கோடி ரூபாய் போன்ற மதிப்புகளில் தேர்தல் பத்திரங்களை எஸ்.பி.ஐ. வங்கி விற்பனை செய்கிறது.

இதன் மூலம் தனி நபர், நிறுவனங்கள் என அனைவரும் தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு நிதி அளிக்கலாம். ஒருவர் எத்தனை தேர்தல் பத்திரம் பெறலாம் போன்ற எந்த அளவு கட்டுப்பாடுகளும் இல்லை. மார்ச் 2018 மற்றும் 2022க்கு இடைப்பட்ட காலத்தில் தேர்தல் பத்திரங்கள் மூலம் பெறப்பட்ட நிதியில் பா.ஜ.க.விற்கு அதிக அளவில் நிதி சென்றது. 4 ஆண்டுகளில் மட்டும் பா.ஜ.க. சுமார் 5 ஆயிரத்து 270 கோடி ரூபாயை தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடையாக பெற்றது.

இதனிடையே, தேர்தல் பத்திரங்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் பொது நல வழக்குகள் தொடரப்பட்டன. தேர்தல் பத்திரங்கள் ஊழலுக்கே வழிவகுக்கும் என்று மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் வாதிட்டார். 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக தேர்தல் பத்திர வழக்கில் தீர்ப்பு வழங்க வேண்டும் என்றும் மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் கேட்டுக் கொண்டார். இந்நிலையில், தேர்தல் பத்திரங்கள் தொடர்பான வழக்கு விசாரணையை அரசியல் சாசன அமர்வுக்கு மாற்றி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அரசியல் சாசன அமர்வில் வருகிற 30ஆம் தேதி விசாரணை நடைபெறும் என்று தலைமை நீதிபதி அறிவித்துள்ளார்.

## எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படையில்

# விளிம்பு நிலை மக்களின் வாழ்வில் ஒளியேற்றியது கழக அரசு!

## மாற்றுத் திறனாளிகள் நல வாரிய ஆலோசனைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, அக். 17 -**

**“எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படையில் விளிம்பு நிலை மக்களின் வாழ்வில் ஒளியேற்றியது கழக அரசு” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநில மாற்றுத் திறனாளிகள் நல வாரிய ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றும் போது பெருமிதத்துடன் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (16.10.2023) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியக் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு :-

மாற்றுத்திறனாளிகள் என்று பெயரிட்டு, அவர்களுக்கெனத் தனித் துறையையும் உருவாக்கி, விளிம்புநிலை மக்களான அவர்களது வாழ்வில் விளக்கேற்றியது நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு.

நம்முடைய அரசு, மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் அரசாக, அவர்களது நலன் பேணும் அரசாக, அவர்களது உரிமைகளை நிலைநாட்டும் அரசாகச் செயல்பட்டு வருகிறது.

**அதனால், “ஒரே ஒரு மாற்றுத்திறனாளி கூட மன வருத்தம் அடைந்துவிடக் கூடாது; ஒரே ஒருவருக்கு நன்மை அளிக்கும் என்றாலும் அந்தச் செயலை நாம் செய்தாக வேண்டும்” என்று முன்பு நடந்த கூட்டத்தில் நான் குறிப்பிட்டதை மீண்டும் இப்போது தொடக்கத்திலேயே நினைவூட்ட விரும்புகிறேன்.**

நமது நாடு, ஐக்கிய நாடுகள் சபையில் மாற்றுத்திறனாளிகளின் அடிப்படை உரிமைகளை காப்பதற்கான ஒப்பந்தத்தில் (UNCRPD) கையெழுத்திட்டு இருப்பதின் அடிப்படையிலும், நமது அரசின் குறிக்கோள்களான அனைத்துயிர்களும் ஒன்று எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படையிலும், செயல்படுத்தப்பட்டு வரும் ஒரு சில திட்டங்களை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

### மதிப்பூதியம் உயர்வு!

- மாற்றுத்திறனாளிகளுக்கு நான்கு விழுக்காடு இடஒதுக்கீட்டின்கீழ், அரசுத் துறைகளில் உள்ள பின்னடைவு காலிப் பணியிடங்களை ஓராண்டிற்குள் நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான குறைபாட்டினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, அதனை பயிற்சிகளின் மூலம் கட்டுப்படுத்தும் 92 மையங்கள் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த மையங்களில் சேவை புரியும் பணியாளர்களுக்கு, மதிப்பூதியம் உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

- மாற்றுத்திறனாளிகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வியினை வழங்குவதற்காக 22 சிறப்புப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இத்துடன் அரசு சாரா நிறுவனங்களுக்கு மானியம் வழங்கியும், சிறப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அங்கு பயிலும் மாணவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையை இருமடங்காக உயர்த்தி இருக்கிறோம்.

- உயர்கல்வி பயிலும், 1000 பார்வை மாற்றுத்திறன் மாணவர்களுக்கு நவீன வாசிக்கும் கருவி வழங்கும் வகையில், 1 கோடியே 40 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்த அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

### முதன்மைத் தேர்வு எழுத ரூ.50 ஆயிரம் ஊக்கத்தொகை!

- UPSC, TNPSC நடத்தும் தொகுதி 1 முதல்நிலை தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவ, மாணவியருக்கு முதன்மை தேர்வு எழுத தலா 50 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை.
- உள்ளாட்சி அமைப்புகள் மூலம் கட்டப்படும் வணிக வளாகங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கு 5 விழுக்காடு ஒதுக்கீடு வழங்க ஆணை.
- தேசிய நிதி மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன் பெறும் மாற்றுத் திறனாளிகள் உரிய சமயத்தில் கடனை திருப்பி செலுத்தும்போது, கடனுக்கான வட்டி தொகையை மாநில அரசே செலுத்துகிறது.

தமிழ்நாடு மாநில மத்திய கூட்டுறவு வங்கி கடன் வழங்கும் நிறுவனமாக நியமிக்கப்பட்டு, 14 ஆயிரத்து 271 மாற்றுத் திறனாளிகளுக்கு 64 கோடி ரூபாய் செலவில் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- சிறு, குறு தொழில் மற்றும் பெட்டிக் கடை தொடங்க விரும்பும் மாற்றுத் திறனாளிகளுக்கு 25 ஆயிரம் ரூபாய் அல்லது கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு என,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 17-10-2023

# ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான போர் - 2

சுதந்திரக் காலம் தொட்டே, இந்தியாவின் ஆதரவு என்பது பாலஸ்தீனத்துக்கே எப்போதும் இருந்து வந்திருக்கிறது. முதல் பிரதமர் நேரு முதல் அனைத்து இந்தியப் பிரதமர்களும் பாலஸ்தீனத்தையே ஆதரித்து வந்தனர். ஆனால், 2014-ஆம் ஆண்டு பா.ஜ.க வெற்றிபெற்று பிரதமர் மோடி வந்தது முதல் நிலைமை மாறியது. இதுவரை எந்த இந்தியப் பிரதமரும் இஸ்ரேலுக்குச் சென்றிருக்காத நிலையில், 2017 ஆம் ஆண்டு முதன்முறையாக அந்த நாட்டுக்குச் சென்றார் மோடி. பல ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டார் மோடி. இதன் மூலம், இஸ்ரேல் சென்ற முதல் இந்தியப் பிரதமர் ஆனார். இது வெறும் செய்தி அல்ல. இதுவரை இருந்த பிரதமர்கள் ஏன் செல்லவில்லை என்பதுதான் செய்தி. இஸ்ரேலின் காலனி ஆதிக்க எண்ணத்துக்கு எதிராக இதுபோன்ற நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர்கள் எடுத்தார்கள்.

மோடி முதன்முதலாக வந்தபோது, இஸ்ரேலின் அப்போதைய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹு 'இந்தியப் பிரதமரின் வருகைக்காக 70 ஆண்டுகள் காத்திருந்தோம்' என்று பேசினார். ஏன் காத்திருந்தார்கள் என்பதுதான் செய்தி. இஸ்ரேலில் வேகமாக வளரக்கூடிய ரகத்தைச் சேர்ந்த 'க்ரைசாந்துமன்' என்ற மலருக்கு 'மோடி' என்றும் பெயரையும் வைத்தார். பதிலுக்கு மோடியும், இந்தியாவுடன் யூத வர்த்தக சரித்திரத்தைப் பற்றிய மிகப் பழைமையான செப்புத் தகடுகளிலான ஆவணங்களைப் பரிசாக வழங்கினார்.

**பல காலமாக பாலஸ்தீன - இஸ்ரேல் விவகாரத்தில் இந்தியா நடுநிலையைத்தான் பின்பற்றியது. ஆனால், முதன் முதலாக 2019-ஆம் ஆண்டு 'ஷாஹித்' அமைப்பு தொடர்பாக ஐ.நா. அமைப்பில் நடந்த வாக்கெடுப்பில் இஸ்ரேலுக்கு ஆதரவாக மோடி தலைமையிலான அரசு வாக்களித்தது. இப்போது இஸ்ரேலை முழுமையாக ஆதரிக்கும் முடிவை எடுத்திருக்கிறார் பிரதமர். அங்கு பாலஸ்தீனியர்கள் அனுபவிக்கும் துன்பத்தை பிரதமர் கணக்கிட்டதாகத் தெரியவில்லை.**

ஹமாஸ் அமைப்பினருக்குப் பதிலடி தருகிறோம் என்ற போர்வையில் ஒட்டுமொத்த பாலஸ்தீனர்களுக்கு எதிரான போரை இஸ்ரேல் நடத்தி வருகிறது. காசா பகுதியில் உணவு, குடிநீர், மின்சாரத்தை நிறுத்தி இருக்கிறார்கள். ஐ.நா.வின் கண்டிப்பையும் மீறி இது நடந்துள்ளது. 24 மணி நேரத்துக்குள்ளாக 11 லட்சம் மக்கள் வெளியேற வேண்டும் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

**"காசா பகுதிக்கான குடிநீர், மின்சாரம், எரிபொருள் ஆகிய அனைத்தையும் இஸ்ரேல் நிறுத்திவிட்டது. இதனால் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது கூட சிரமமாக இருக்கிறது. நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும். அதைக் கூடச் செய்ய முடியவில்லை. இப்போதுள்ள குடிநீர், உணவுப் பொருள்கள் சில நாட்களுக்கு மட்டும்தான் இருக்கும். பாலஸ்தீன மக்கள் பசியால் வாடுகிறார்கள். காசா பகுதி முழுக்க சேதம் அடைந்துள்ளது. தொலைத் தொடர்பு வசதி துண்டிக்கப்பட்டுள்ளது. மிகக்குறுகிய காலத்தில் இத்தனை லட்சம் பேரால் எப்படி வெளியேற முடியும்?" என்று ஐ.நா. சபையின் மூத்த அதிகாரி ஜெனிபர் ஆஸ்டின் சொல்லி இருக்கிறார்.**

ஐ.நா. பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்டெரெஸ் இஸ்ரேல் நடவடிக்கைகள் குறித்து கவலை தெரிவித்திருக்கிறார். காசா நிலப்பகுதியை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டதாக இஸ்ரேல் அறிவித்திருப்பதும், மனிதாபிமான நெருக்குதல்களை ஏற்படுத்தும் என்றும் அவர் சொல்லி இருக்கிறார்.

"மின்சாரம், உணவு, எரிபொருள் எதுவுமே அனுமதிக்கப்படாத காசா பகுதியை இஸ்ரேல் முழுவதுமாக முற்றுகையிடும் என்ற இஸ்ரேலின் அறிவிப்பால் நான் மிகவும் வேதனையடைந்துள்ளேன். காசாவில் மனிதாபிமான நிலைமை இதற்கு முன்னரே மிகவும் மோசமாக இருந்தது. இப்போது அந்நிலைமை மேலும் மோசமடையும். மனிதாபிமான பணியாளர்களுக்கான அணுகலுடன் மருத்துவ உபகரணங்கள், உணவு, எரிபொருள் மற்றும் பிற மனிதாபிமான பொருட்கள் மிகவும் தேவைப்படுகின்றன," என்றும் அவர் குறிப்பிட்டார். உலக மனிதாபிமான சட்டத்தின்படி இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் குட்டெரெஸ் இஸ்ரேலுக்கு நினைவூட்டியுள்ளார். மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர்களின் அடிப்படை வசதிகள் ஒருபோதும் தாக்குதலின் இலக்காக இருக்கக்கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டார். ஆனால் இதைக் கேட்கும் நாடாக இஸ்ரேல் இல்லை. அப்படி கேட்கும் இயல்பு கொண்ட நாடும் அல்ல அது.

**தங்கள் மீது ஹமாஸ் படையினர் நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாக இஸ்ரேல் ராணுவம் நடத்திய தாக்குதலில் இதுவரை 2000 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளார்கள். காயமடைந்தவர்களை, மருத்துவமனையை விட்டு வெளியேறச் சொல்லி வருகிறது இஸ்ரேல் ராணுவம். இது சர்வதேச சட்டங்களுக்கு எதிரானது ஆகும். ஜெனிவா உடன்படிக்கையை மீறுவதும் ஆகும். நோயாளிகளை அப்படியே விட்டுவிட்டும் செல்ல முடியாது. அவர்களை எடுத்துக் கொண்டும் செல்ல முடியாது. 'இத்தகைய கொலையை நாங்கள் செய்ய மாட்டோம்' என்று காசா சுகாதாரத் துறை சொல்லி இருக்கிறது.**

**இவை அனைத்தும் இஸ்ரேலின் கொடுமையான முகத்தைக் காட்டுகிறது. இத்தகைய ஆக்கிரமிப்பாளர்களின் போர்களுக்கு நிரந்தரமான முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். 'போர்கள் யாருக்கும் பயனளிக்காது' என்று சொல்லும் இந்தியப் பிரதமர் அவர்கள், போரின் ஒரு தரப்பை ஆதரித்தும் இருக்கிறார்.**

ஆயுதங்களை தயாரிப்பவர்களுக்கு போர்கள் தேவை. அதிகாரப் பசியில் இருப்பவர்களுக்கு போர்கள் தேவை. இஸ்ரேலாக ஆக நினைப்பவர்களுக்கு போர்கள் தேவை. பிளவுவாத எதேச்சதிகாரிகளுக்கு போர்கள் தேவை. அப்படி ஒரு போரைத்தான் இஸ்ரேல் இன்று நடத்தி வருகிறது.

**மக்களுக்கு போர் தேவையில்லை. அப்பாவிகளுக்கு போர் தேவையில்லை. ஆனால் அனைத்துப் போர்களிலும் முதலில் கொல்லப்படுவது உண்மை. இரண்டாவது கொல்லப்படுவது மக்கள். அதைத்தான் இப்போது பார்க்கிறோம். இஸ்ரேல் அடங்குவது எப்போது? அடக்க யாரால் முடியும்? அதற்குள் எத்தனை பலிகள்?!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.10.2023) தலைமைச் செயலகத்தில், சென்னை உயர்நீதிமன்றத்தின் கீழ் மாவட்ட குற்றவியல், உரிமையியல், சார்பு நீதிமன்றங்கள் மாஜிஸ்திரேட் மற்றும் முன்சீப் நீதிமன்றங்களில் அரசு சார்பாக வழக்கினை நடத்திடும் அரசு வழக்குரைஞர்களின் கட்டண விகிதத்தை இரு மடங்காக உயர்த்தி வழங்குவதற்கான அரசாணையை விழுப்புரம் மாவட்ட அரசு குற்றவியல் வழக்குரைஞர் டி.எஸ்.சுப்ரமணியன், சென்னை மாநகர குற்றவியல் அரசு வழக்குரைஞர் தேவராஜன், இராமநாதபுரம் மாவட்ட அரசு குற்றவியல் வழக்குரைஞர் கார்த்திகேயன் மற்றும் சென்னை மாநகர உரிமையியல் அரசு வழக்குரைஞர் ஷாஜகான் ஆகியோரிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, அரசு தலைமைக் குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகம்மது ஜின்னா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மாநிலம் முழுவதும் 700 பேர் அரசு சார்பாக வழக்கு நடத்தி வருகின்றனர்!

# அரசு வழக்குரைஞர்களின் கட்டண விகிதம் 2 மடங்காக உயர்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணையை வழங்கினார்!

**சென்னை, அக். 17 -**

**சென்னை உயர்நீதிமன்றத்தின் கீழ் மாவட்ட குற்றவியல், உரிமையியல், சார்பு நீதிமன்றங்கள் மாஜிஸ்திரேட் மற்றும் முன்சீப் நீதிமன்றங்களில் அரசு சார்பாக வழக்கினை நடத்திடும் அரசு வழக்குரைஞர்களின் கட்டண விகிதத்தை இரண்டு மடங்காக உயர்த்தி வழங்குவதற்கான அரசாணையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு வழக்குரைஞர்களுக்கு வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.10.2023) தலைமைச் செயலகத்தில், சென்னை உயர்நீதிமன்றத்தின் கீழ் மாவட்ட குற்றவியல், உரிமையியல், சார்பு நீதிமன்றங்கள் மாஜிஸ்திரேட் மற்றும் முன்சீப் நீதிமன்றங்களில் அரசு சார்பாக வழக்கினை நடத்திடும் அரசு வழக்குரைஞர்களின் கட்டண விகிதத்தை இரு மடங்காக உயர்த்தி வழங்குவதற்கான அரசாணையை விழுப்புரம் மாவட்ட அரசு குற்றவியல் வழக்குரைஞர் டி.எஸ்.சுப்ரமணியன், சென்னை மாநகர குற்றவியல் அரசு வழக்குரைஞர் தேவராஜன், இராமநாதபுரம் மாவட்ட அரசு குற்றவியல் வழக்குரைஞர் கார்த்திகேயன் மற்றும் சென்னை மாநகர உரிமையியல் அரசு வழக்குரைஞர் ஷாஜகான் ஆகியோரிடம் வழங்கினார்.

சென்னை உயர்நீதிமன்றத்தின் கீழ் மாவட்ட குற்றவியல், உரிமையியல், சார்பு நீதிமன்றங்கள் மாஜிஸ்திரேட் மற்றும் முன்சீப் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இந்நீதிமன்றங்களில் அரசு சார்பாக வழக்கினை நடத்திட அரசு வழக்குரைஞர்கள் பலர் நியமிக்கப்பட்டு, சுமார் 700க்கும் மேற்பட்ட அரசு வழக்குரைஞர்கள் அரசு சார்பாக வழக்கினை நடத்தி வருகின்றனர்.

இந்நீதிமன்றங்களில் வழக்குகளை நடத்தும் அரசு வழக்குரைஞர்களின் கட்டண விகிதம் 1995ஆம் ஆண்டிற்குப் பிறகு மாற்றி அமைக்கப்படாமல் இருந்தது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2006ஆம் ஆண்டு பதவியேற்றதும், அரசு வழக்குரைஞர்களின் கட்டண விகிதத்தை மாற்றி அமைத்திட 2007ஆம் ஆண்டு ஒரு குழுவை அமைத்து, அக்குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில், 2011ஆம் ஆண்டு கட்டண விகிதம் கணிசமாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டது. 2011 ஆம் ஆண்டிற்குப்பின், 10 வருட காலம் கட்டண விகிதம் ஏதும் மாற்றி அமைக்கப்படவில்லை.

அரசு வழக்குரைஞர்களின் பங்களிப்பு மற்றும் பணிப்பளுவினை கருத்திற்கொண்டு இவர்களது கட்டண விகிதத்தை மாற்றி அமைப்பது அவசியம் எனக் கருதி அரசு தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகம்மது ஜின்னா அவர்கள் அளித்த பரிந்துரை கடிதத்தை தமிழ்நாடு அரசின் தலைமை வழக்குரைஞர் தமிழ்நாடு அரசுக்கு அனுப்பி வைத்தார்.

இதனை அரசு கவனமுடன் பரிசீலித்து, தமிழ்நாடு அரசின் தலைமை வழக்குரைஞர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், அரசு வழக்குரைகளின் கட்டண விகிதத்தை இரு மடங்காக உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் உயர்நீதிமன்றம் தவிர்த்த அனைத்து நீதிமன்றங்களில் சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளை நடத்தும் அனைத்து அரசு வழக்குரைஞர்களும் பயன் பெறுவார்கள்.

இந்நிகழ்ச்சியில், சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, அரசு தலைமைக் குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகம்மது ஜின்னா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### பெரியார் - அண்ணா - கலைஞர் வலியுறுத்திய

# சமூக நீதிக் கொள்கையில் இந்தியாவிற்கே தமிழ்நாடுதான் முன்னணி மாநிலம்!

## தேசியவாத காங்கிரஸ் செயல் தலைவர் சுப்ரியா சுலே பாராட்டு!

*சென்னை, அக். 17-*

*தமிழ்நாட்டில் சாதி, மத வேறுபாடுகள் இல்லாமல் மொழி மீதுதான் பற்று உண்டு. பெரியார், அண்ணா, கலைஞர் வலியுறுத்திய சமூக நீதிக்கொள்கையில் இந்தியாவிற்கே தமிழ்நாடு தான் முன்னோடி. பெண்கள் உரிமைகளுக்காக பெரியார் முதலில் நடத்திய சுயமரியாதை மாநாடு போல இந்த மகளிர் உரிமை மாநாடு நடைபெறுகிறது என சென்னை ஒய்.எம்.சி.ஏ. திடலில் கழக மகளிர் உரிமை மாநாட்டில் பேசிய தேசியவாத காங்கிரஸ் செயல் தலைவர் சுப்ரியா சுலே பாராட்டு தெரிவித்தார்.*

*மகளிர் உரிமை மாநாட்டில் தேசியவாத காங்கிரஸ் செயல் தலைவர் சுப்ரியா சுலே, பேசியதாவது:-*

*தமிழ்நாடு நீண்ட நெடிய பாரம்பரியத்தைக் கொண்ட மாநிலம். இங்கே சாதி மத வேறுபாடுகள் இல்லாமல் மொழி மீதுதான் பற்று இருக்கிறது. பெரியார், அண்ணா, கலைஞர் உள்ளிட்ட தலைவர்கள் வலியுறுத்திய சமூக நீதி கொள்கையிலும் இந்தியாவிற்கே தமிழ்நாடு தான் முன்னோடி மாநிலமாக இருக்கிறது.*

*பெண்கள் உரிமைகளை வலியுறுத்தி பெரியார் முதலில் சுயமரியாதை மாநாட்டை நடத்தினார். இப்போது அதே வழியில் இந்த மகளிர் உரிமை மாநாடு நடைபெறுகிறது. தமிழ்நாட்டிற்கும் எனது மாநிலமான மகாராஷ்டிராவுக்கும் பாரம்பரியத் தொடர்பு இருக்கவே செய்கிறது. மகாராஷ்டிராவில் சத்ரபதி சிவாஜி விழா, அம்பேத்கர் ஆகியோரின் நூற்றாண்டை நாங்கள் மகாராஷ்டிராவில் கொண்டாடும் நிலையில், தமிழ்நாடு இங்கே கலைஞர் நூற்றாண்டைக் கொண்டாடுகிறது.*



*தமிழ்நாடு மற்றும் தமிழர்களின் உரிமைக்காக நாடாளுமன்றத்தில் தி.மு.க. தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது. மக்கள் உரிமை சார்ந்த பிரச்சினைகளைத் தொடர்ந்து எழுப்பி வருகிறார்கள். கூட்டாட்சிக்காகத் தொடர்ந்து குரல் கொடுக்கும் தமிழ்நாட்டைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். மக்களவையில் நீங்கள் பார்த்தீர்கள் என்றால் எப்போதும் என்னைச் சுற்றி தி.மு.க. எம்.பி.க்களே இருப்பார்கள். கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தமிழ்நாடு கடுமையாக எதிர்த்து வருகிறது.*

*நாடாளுமன்றத்தில் கனிமொழியைக் கண்டாலே பா.ஜ.க.வினருக்குப் பயம் வந்துவிடும். இதன் காரணமாகவே அவர் பேச எழுந்தால் உடனடியாக பா.ஜ.க.வினர் அமளியில் ஈடுபடுவார்கள். பெண்கள் என்றாலே அன்பு. கருணை என்று எங்களைப் போற்ற வேண்டாம் என்றும் ஆண்களுக்கு எந்த விதத்திலும் குறைந்தவர்கள் இல்லை என்று கனிமொழி எப்போதும் கூறுவார்.*

*தமிழ்நாட்டில் பெண்கள் நலனுக்காக தமிழ்நாடு முதல்வரும், எனது அண்ணனுமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ச்சியாக பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். அவரது திட்டங்கள் பெண்கள் வாழ்க்கையை முன்னேற்றியுள்ளது.*

*மகாராஷ்டிராவில் எங்கள் கட்சியில் சிக்கல் இருப்பது உங்களுக்குத் தெரியும். எங்கள் தேசியவாத காங்கிரஸ் சின்னத்தைத் தேர்தல் ஆணையத்திடம் இருந்து பெறுவதில் பிரச்சினை இருக்கிறது. இதனால் அடுத்து வரும் லோக்சபா தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட எனக்கு அண்ணன் ஸ்டாலின் வாய்ப்பு தர வேண்டும்"*

*இவ்வாறு சுப்ரியா சுலே அவர்கள் பேசினார்.*

## 'வாட்ஸ் அப்' பில் வந்த செய்தி!





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.10.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநிலத் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா, பொருளாளர் சதக்கத்துல்லா, கூடுதல் செயலாளர் வி.பி.மணி மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, தமிழ்நாட்டில் உள்ள வணிகர் பெருமக்கள் மற்றும் நிறுவனங்களுக்கும், வணிகவரித் துறைக்கும் இடையே உள்ள வரி நிலுவை மற்றும் மேல்முறையீடுகள் குறித்த பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டத்தை அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, வணிகவரி ஆணையர் / முதன்மைச் செயலாளர் தீரஜ் குமார், வணிகவரி மற்றும் பதிவுத்துறைச் செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.10.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் உள்ள வணிகர் பெருமக்கள் மற்றும் நிறுவனங்களுக்கும், வணிகவரித் துறைக்கும் இடையே உள்ள வரி நிலுவை மற்றும் மேல்முறையீடுகள் குறித்த பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அறிவிக்கப்பட்டுள்ள புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டத்தின் கீழ் 5 நபர்களுக்கு வரி நிலுவை ரத்துக்கான சான்றிதழ்களை வழங்கினார். உடன் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வணிகவரி ஆணையர் / முதன்மைச் செயலாளர் தீரஜ் குமார், வணிகவரி மற்றும் பதிவுத்துறைச் செயலாளர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் மாநிலத் தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா ஆகியோர் உள்ளனர்.

## நரம்பியல் துறை வல்லுநராக – இந்தியாவின் முகமாகவே

# உலகம் முழுவதும் அறியப்பட்ட சிறப்புக்குரியவர்!

## மருத்துவர் பி.இராமமூர்த்தி நூற்றாண்டு விழாவையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துரை!

**சென்னை, அக்.17–**

**“இந்தியாவின் முகமாகவே உலகம் முழுவதும் அறியப்பட்ட சிறப்புக்குரியவர் மருத்துவர் பி.இராமூர்த்தி அவர்கள்” என்று அவரது நூற்றாண்டு விழாவையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலியில் உரையாற்றும் போது புகழாரம் சூட்டினார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.10.2023) காணொலிக் காட்சி வாயிலாக நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் பி. ராமமூர்த்தி அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி வெளியிட்டுள்ள வாழ்த்துரை வருமாறு:**

நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய மருத்துவர் பி. ராமமூர்த்தி அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடுவதையும், அதற்காக மிகச் சிறப்பான நினைவுத் தொகுப்பு வெளியிடப்படுவதும் மகிழ்ச்சிக்குரியது.


இந்த நிகழ்ச்சிக்காக அவரது குடும்பத்தின் சார்பில் என்னிடம் அழைப்பிதழ் தந்தார்கள். ராமமூர்த்தி அவர்கள் எங்கள் குடும்ப மருத்துவர் என்பதை தாண்டி எங்கள் குடும்ப நண்பர் என்று தான் முதலில் சொல்ல வேண்டும்.

மருத்துவர் ராமமூர்த்தி அவர்களுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் நீண்ட கால நட்பு உண்டு. தலைவர் கலைஞர் அவர்களும், மருத்துவர் ராமமூர்த்தி அவர்களும் பேசிக் கொண்டிருப்பதை கேட்டால், இளமைக் கால நண்பர்கள் பேசிக் கொள்வதைப் போல இருக்கும்.

**மிசா காலத்தில் மருத்துவமனைக்கு என்னை பார்க்க வந்தவர்!**

தலைவர் கலைஞரின் இலக்கிய ஆளுமை, எழுத்துநடை, ஆட்சி நிர்வாகத் திறன் மீது டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் பெருமதிப்பு கொண்டிருந்தார். கலைஞர் மீது மட்டுமல்ல, என் மீதும் மருத்துவர் அவர்கள் மிகுந்த அன்பு கொண்டிருந்தார்.

நெருக்கடி நிலைக் காலத்தில், மிசா சட்டத்தின்கீழ் நான் சிறையில் அடைக்கப்பட்டிருந்தபோது, உடல்நலம் பாதிக்கப்பட்டு சென்னை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தேன். என்னைப் பார்ப்பதற்காக அனுமதி பெற்று வந்தவர் தான் மருத்துவர் ராமமூர்த்தி அவர்கள். எனது உடல் நிலையைக் கவனித்துக் கொண்டவர் டாக்டர் ராமமூர்த்தி அவர்கள்.



மருத்துவ உலகத்தை கடந்து, அவருக்கு சமூக ஆர்வமும், நாட்டு மக்கள் மீதான அக்கறையும் அதிகமாக இருந்தது.

**இருசக்கர வாகனப் பயணத்தில் தலைக் கவசம் அணிய வலியுறுத்தியவர்!**

இருசக்கர வாகனங்களில் அதிவேக பயணத்தின் காரணமாக பெரும் விபத்தையும், உயிரிழப்பையும் சந்தித்து வருவதை அறிந்து, தலைக்கவசத்தை கட்டாயமாக்க வேண்டும் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்களின் வீட்டிற்கே வந்து வாதாடினார். எதையும் கட்டாயமாக்கினால் கெட்ட பெயர் வந்து விடும், உள்நோக்கம் கற்பிப்பார்கள் என்று முதலமைச்சர் கலைஞர் அதன் இன்னொரு பக்கத்தை எடுத்துச் சொன்னார்கள். மனித உயிரைக் காப்பதைவிட விமர்சனங்கள் பெரிதல்ல என்று வலியுறுத்தியவர் டாக்டர் ராமமூர்த்தி அவர்கள். அந்த இடத்தில் மருத்துவர் என்பதைக் கடந்து மனிதாபிமான காவலராக அவர் காட்சியளித்தார்.

**மிகப் புகழ்வாய்ந்த குடும்பத்தில் பிறந்தவர்!**

மிகப் புகழ்வாய்ந்த, நாட்டுப்பற்று மிகுந்த குடும்பத்தில் பிறந்த ராமமூர்த்தி அவர்கள், தனக்கெனத் தனிப் பாதையைத் தேர்ந்தெடுத்ததோடு, அதில் தனிச்சிறப்பான இடத்தை தனக்கென உருவாக்கிக் கொண்டவர். உயிர் காக்கும் துறையான மருத்துவத்துறையில், நரம்பியல் துறை வல்லுநராக இந்தியாவின் முகமாகவே உலகம் முழுதும் அறியப்பட்ட சிறப்புக்குரியவர் டாக்டர் ராமமூர்த்தி அவர்கள். இந்திய நரம்பியல் அறுவை சிகிச்சை இயலின் தந்தை என்றே போற்றப்பட்டவர்.

**குடியரசுத் தலைவர் – பிரதமர்களால் மதிக்கப்பட்டவர்!**

டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் உலகம் முழுதும் சென்று உரை நிகழ்த்தியுள்ளார், உலகெங்கிலும் இருந்து வல்லுநர்களை இந்தியாவுக்கு அழைத்து வந்து கருத்தரங்குகளை நடத்தியுள்ளார். நரம்பியல் துறையிலும், தலைப் பகுதியில் ஏற்படும் காயங்களுக்கான சிகிச்சைப் பிரிவிலும் பல முன்னெடுப்புகளை நிகழ்த்தியுள்ளார். புதிய பிரிவுகளை நிறுவியுள்ளார். புகழ்பெற்ற சென்னை மருத்துவக் கல்லூரியின் முதல்வராகவும் பொறுப்பு வகித்துள்ளார். இந்திய குடியரசுத் தலைவர்களாக இருந்த டாக்டர் ராதாகிருஷ்ணன், வி.வி.கிரி ஆகியோராலும், இந்தியப் பிரதமர்களான ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி ஆகியோராலும் மதிக்கப்பட்ட ஆளுமையாக இருந்துள்ளார்.

மருத்துவத்துறை முன்னோடியாகவும், மனிதநேயப் பண்பாளராகவும் திகழ்ந்த டாக்டர் ராமமூர்த்தி அவர்களின் நூற்றாண்டில் அவரது வாழ்வும் பணியும் சிறப்பான முறையில் நினைவுகூரப்பட எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவரைப் போன்ற மனிதாபிமான மருத்துவ சமுதாயம் உருவாக உறுதியேற்போம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்...

முதல் பக்கத் தொடர்ச்சி

இவற்றில்எதுகுறைவானதொகையோ அது மானியமாக வழங்கப்படுகிறது.

• மாற்றுத்திறனாளிகள் நலத் துறை மூலம் ஐந்து வகையான மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் வழங்கப்பட்டு வந்த பராமரிப்பு உதவித்தொகை 2,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

• வருவாய் துறையின்கீழ் வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உதவித் தொகை 1500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

• இத்துடன் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் மாற்றுத்திறனாளி குடும்ப தலைவி பெண்களுக்கு 1000 ரூபாய் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

• ஒரு கால் பாதிப்படைந்த மாற்றுத்திறனாளிகளும் பயன்பெறும் வகையில் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டம் விரிவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்படி வரிசையாக சொல்லிக் கொண்டே இருக்கலாம்.

• மாற்றுத்திறனாளிகளின் கண்ணியம், தனிப்பட்ட சுதந்திரம், சுயமாக முடிவெடுக்கும் உரிமைகள் ஆகியவற்றினை ஊக்குவிக்கும் விதமாக தனியே மாநில ஆணையரகம் மூலம் வழக்குகளில் தீர்வு கண்டும்,

• மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் உள்ளூர் மட்டக் குழு அமைத்து “பாதுகாவலர் சான்றிதழ்” வழங்கியும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்கிறது.

**விபத்து நிவாரண உதவித் தொகை உயர்வு!**

• மனநலம் பாதிப்படைந்தவர்களின் நலனுக்காக, “இடைநிலை பராமரிப்பு மையம்” மற்றும் “மீண்டும் இல்லம்” என்னும் புதிய திட்டத்தினை ஏற்படுத்தி உள்ளது.

இதனால் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டு ஆதரவற்ற நிலையில் உள்ள மனநலம் பாதிப்படைந்த பெண்கள் மீண்டும் சமுதாயத்தில் தன்னிச்சையாக வாழ வழிவகை செய்யப்பட்டுள்ளது.

• மனநலம் மற்றும் அறிவுசார் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மூன்று இல்லங்கள் திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தின் வாயிலாக வழங்கப்பட்டு வரும் விபத்து நிவாரணம், மருத்துவம், கல்வி மற்றும் இதர உதவித் தொகைகள் உயர்த்தி, வழங்கப்பட்டு வருகின்றன.

மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்ற சூழல் அமைக்கும் நடவடிக்கையாக புதிய கட்டடங்கள் அனைத்திலும், மின்தூக்கி, சாய்வுதளப்பாதை களை அமைத்திடவும், மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டிற்கு உகந்த கழிவறைகள் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தடையற்ற சூழல் அமைப்பதற்கான வழிகாட்டுதல்கள் குறித்த விழிப்புணர்வு பயிற்சிகள் மாவட்ட அளவிலும் நடத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சைகை மொழிபெயர்ப்பாளர்களின் எண்ணிக்கையை உயர்த்தி, அரசு கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளில் பயன்படுத்துவதற்காக 15 லட்சம் ரூபாய் செலவில் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பயிற்சி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**குறிப்பாக, கரூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் “விடியல் வீடு” என்னும் திட்டம், முன்னோடி திட்டமாக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அமைக்கப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் கட்டப்படும் அடுக்குமாடி வீடுகளில் தரைத் தளத்தில் வீடுகள் ஒதுக்கீடு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

தடையற்ற சூழல் நடவடிக்கைகளை ஊக்குவிக்க மாநில விருதுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

தடையற்ற சூழல் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் அரசின் முன்னெடுப்பு நடவடிக்கையாக, மாற்றுத்திறனாளிகள் இயக்குநரக வளாகத்தில் “அனைத்தும் சாத்தியம்” அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது.

இந்தச் சிறப்பு முயற்சியினைப் பாராட்டி, புதுதில்லியில் நடைபெற்ற ’எம்பசிஸ்’ விழாவில் “மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பு மேம்பாட்டிற்கான தேசிய மையத்தால்” 2023 ஆம் ஆண்டிற்கான “உலகளாவிய வடிவமைப்பு விருது”, “அனைத்தும் சாத்தியம்” அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகளில் தடையில்லாமல் மேற்கொள்ளும் நடவடிக்கையாக சென்னை மெரினா கடற்கரை, தூத்துக்குடி முத்து நகர் கடற்கரை ஆகியவற்றை மாற்றுத்திறனாளிகள் அணுகத்தக்க வகையில் நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**விடியல் வீடு திட்டம்!**

மாற்றுத்திறனாளிகள் தங்கும் இருப்பிடங்களிலும் தடையற்ற சூழல் அமைய மாவட்ட அளவில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாக, கரூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் “விடியல் வீடு” என்னும் திட்டம், முன்னோடி திட்டமாக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அமைக்கப்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம் கட்டப்படும் அடுக்குமாடி வீடுகளில் தரைத்தளத்தில் வீடுகள் ஒதுக்கீடு செய்ய உரிய நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாற்றுத்திறனாளிகளுக்கு உலக வங்கி நிதி உதவியுடன் “உரிமைகள் திட்டம்” 1773 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு உட்கோட்ட அளவிலும் ஒருங்கிணைந்த சேவை மையம் அமைத்து மறுவாழ்வு நிபுணர்கள் மூலமாக மாற்றுத்திறனாளிகளுக்கு சமூக பாதுகாப்பு மற்றும் ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவைகள் வழங்கப்படும்.

முதற்கட்டமாக, 5 மாவட்டங்களில் உட்கோட்ட அளவில் 12 ஒருங்கிணைந்த சேவை மையங்கள் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டங்களை எல்லாம் எவ்வாறு மேலும் சிறப்பாக செயல்படுத்தலாம் என்பதை இந்தக் கூட்டத்தில் கலந்தாலோசித்து, உறுப்பினர்கள் அரசுக்குப் பரிந்துரைக்கும் கருத்துக்கள் ஆய்வுசெய்து நுட்பமாகச் செயல்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறுமுதல்வர்மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# தமிழ்நாடு எப்போதுமே சமூக நீதிக்கான களம்தான்!

இந்திய அரசியலில் தன்னிகரற்ற ஆளுமையாகவும், பெண்களின் உரிமை காக்க தொடர்ந்து உழைத்த வருமான நம்முடைய தலைவர் கலைஞரின் நூற்றாண்டை ஒட்டி இந்தியா முழுவதிலும் உள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைசிறந்த பெண் ஆளுமைகள் பங்கேற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க 'மகளிர் உரிமை மாநாட்டை' தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி முன்னெடுப்பில், மகளிர் அணி வெற்றிகரமாக சென்னையில் நடத்தியிருக்கிறது. வெற்றி என்றால் சாதாரணமல்ல. இந்தியாவே திரும்பிப் பார்க்கும் அளவிற்கு பிரம்மாண்டமாக நடைபெற்று இருக்கிறது இந்த மாநாடு.

எப்போதுமே தமிழ்நாடு தான் சமூகநீதிக்கான களமாக இருந்து வருகிறது என்பதற்கு சான்றுகள் ஏராளம் உண்டு. இந்தியாவில் முதன்முறையாக தமிழ்நாட்டில் காவல்துறையில் பெண்களை சேர்த்து நாட்டிற்கே முன் மாதிரியாகத் திகழ்ந்தவர் தலைவர் கலைஞர்தான். அடுப்படியில் பெண்கள் முடக்கப்பட்டிருந்த காலத்திலேயே இதனை செயல்படுத்திக் காட்டியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

சொத்தில் சம உரிமை, வேலைவாய்ப்பில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு, ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் கட்டாயமாக பெண்களைத்தான் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்ற சட்டம், கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவித் தொகை, விதவைகளுக்கு மறு வாழ்வு திட்டம், ஏழை, எளிய குடும்பத்தில் பிறந்திருக்கும் பெண்ணுக்கு திருமணம் என்றால், அந்தப் பெண்ணுக்கு நிதி உதவி செய்யும் ஒரு அற்புதமான திட்டம், மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் என பெண்களின் நலன்களைப் பாதுகாப்பதோடு அவர்களின் உரிமைகளை மீட்டெடுத்து வருவதில் முன்னோடி கழக ஆட்சி தான்.

அதன் தொடர்ச்சியாக, வரலாற்றுச் சிறப்பு மிக்க மகளிருக்கான இட ஒதுக்கீடு சட்டம். இந்தியா கூட்டணி ஆட்சியில் நிறைவேற்றித் தரப்படும் என திராவிட மண்ணில் சூளுரைக்கப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் கேட்கும் வகையில் பல்வேறு மாநில பெண் தலைவர்களின் குரல் இங்கே ஒரு சேர ஓங்கி ஒலித்துள்ளன.

பெண்களுக்கான நலத்திட்டம் என்று சொல்லும் போது அது வெறும் வளர்ச்சிக்கான திட்டமாக மட்டும் இருக்காது கழக ஆட்சியில். அது சீர்திருத்த திட்டமாக இருப்பதுதான் சிறப்பம்சம். அதைத்தான் இங்கு வந்திருந்த தலைவர்களும் வியந்து பேசியுள்ளனர்.

இன்று தமிழ்நாட்டில் தாய்-சேய் இறப்பு விகிதம், இந்தியாவிலேயே மிகக்குறைந்த நிலையிலே இருப்பதற்கு தாய்மார்களுக்கு அரசு செய்து வரும் திட்டங்களே காரணம் என்பதை அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மூத்ததலைவர்சோனியாகாந்திநினைவுபடுத்தியுள்ளார்.

பெண்களுக்கான இட ஒதுக்கீட்டு சட்டத்தை நிறைவேற்றி, இந்தியா கூட்டணி பெண்களை மேம்படுத்தும் என்ற உறுதியையும் அளித்திருக்கிறார்.

பேருந்துகளில் விடியல் பயணம், பெண் அர்ச்சகர்கள், ஓதுவார்கள் நியமனம் இப்படி தமிழ்நாட்டுப் பெண்களுக்கு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் காட்டும் நமது திராவிட மாடல் கொள்கைகள், இந்தியா முழுமைக்கும் பரவும் நாளே, மகளிர் உரிமை பெற்ற நாளாக அமையும் என்று தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியிருப்பது இந்திய தேசத்திற்கான செய்தி. அதுமட்டுமல்ல; தி.மு.க. அங்கம் வகிக்கும் இந்தியா கூட்டணியின் வாக்குறுதி.

இந்தியாவிலேயே பெண்கள் அதிகம் வேலைக்குச் செல்லும் மாநிலமாக தமிழகம் இருக்கிறது. தமிழகத்தில் 43 சதவிகிதம் பெண்கள் வேலைக்குச் செல்கின்றனர் என்கிற புள்ளி விவரத்தை சொல்லியிருக்கிறார் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி. பா.ஜ.க. ஆட்சியில் 2016-17 ல் 15 சதவிகித பெண்கள் வேலைக்குச் செல்லும் வாய்ப்பிருந்த நிலையில் அது 8 சதவிகிதமாகக் குறைந்திருப்பதையும் சுட்டிக்காட்டியிருக்கும் அவர், பா.ஜ.க. ஆட்சி அகற்றப்படும் போது இந்த நிலையும் மாற்றப்படும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். மகளிர் நலனில் இந்தியா கூட்டணி கண்ணும் கருத்துமாக இருப்பதற்கு இதுதான் சான்று.

இதுபோன்று மாநாட்டில் பங்கேற்ற இந்தியா கூட்டணியின் பெண் தலைவர்கள் அனைவரும் மகளிர் முன்னேற்றத்திற் கான அவசியத்தையும், வாக்குறுதியையும் முன் வைத்திருக்கின்றனர். மகளிர் இட ஒதுக்கீடு சட்டம் என்று நாட்டை ஏமாற்றும் பா.ஜ.க. அரசின் செயல்பாடுகளையும் அவர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை. அந்தச் சட்டத்தின் பலனை மகளிருக்கு உடனடியாக கிடைத்து விடாதபடி பிரதமர் நரேந்திர மோடி உருவாக்கி இருக்கும் தடைகள் அகற்றப்படும் என்று எங்களுடைய கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் அனைவரும் உறுதிப்பட தெரிவித்துள்ளனர். இப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க மகளிர் இட ஒதுக்கீடு சட்டம் பெண்களுக்கு உண்மையாகவே பலனை அளிக்கும் வகையில் செயல்படுத்தப்படும் என திராவிட மண்ணில் உறுதிப்பட தெரிவிக்கப்பட்டு இருப்பது நமக்குப் பெருமையல்லவா!

அதனால்தான் சொல்கிறேன் தமிழ்நாடு எப்போதுமே சமூக நீதிக்கான களம்.



திருமதி. ஆ.தமிழரசி ரவிக்குமார், எம்.எல்.ஏ.
இணைச் செயலாளர்,
மாநில மகளிர் தொண்டர் அணி
தி.மு.க.



சென்னை மயிலாப்பூரில் திருக்கோயில்கள் சார்பில் நடத்தப்படும் நவராத்திரி பெருவிழாவினை நேற்று முன்தினம் (15.10.2023) முதலமைச்சர் அவர்களின் துணைவியார் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். உடன் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

# ஊழலை ஒழிப்பதல்ல; ஒளிப்பதே மோடி அரசின் நோக்கம்!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் சாட்சி!

சென்னை, அக். 17-

கௌதம் அதானி மீதான ஊழல் நடவடிக்கைகளை ஒழிப்பதில் அக்கறை காட்டாத மோடி அரசு அதை ஒளிப்பதிலேயே முழு அக்கறை காட்டுகிறது என ‘தீக்கதிர்’ நாளேடு 16.10.2023 தேதிய நாளேட்டில் தலையங்கம் எழுதி வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது.

அது வருமாறு:-

பிரதமர் நரேந்திர மோடியின் நெருங்கிய கூட்டாளியான கௌதம் அதானி மீதான குற்றச்சாட்டுக்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில் அதானி குழுமத்திற்கு சொந்தமான மும்பையில் உள்ள இரண்டு விமான நிலையங்களின் கணக்கு வழக்குகள் குறித்து கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அதிகாரிகள் விசாரணை நடத்தியதாக செய்தி வெளியாகியுள்ளது.

இது வெறும் கண்துடைப்பு நாடகமே ஆகும். நிதி ஆயோக் மற்றும் பொருளாதார விவகாரங்கள் துறையின் கடும் ஆட்சேபணையையும் மீறி ஆறு விமான நிலையங்களை அதானிக்கு தூக்கி கொடுத்தது மோடி அரசு. அதானிக்கு விமான நிலையங் களை தர விரும்பாத உரிமையாளர்கள் மத்திய புலனாய்வுத் துறை மற்றும் அமலாக்கத்துறையினரின் சோதனைக் குள்ளாக்கப்பட்டு மிரட்டப்பட்டனர். மும்பை விமான நிலையங்களை மிரட்டி பறித்து அதானிக்கு கொடுத்தது மோடி அரசு. ஆனால் இப்போது அதானி குழுமத்தின் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், பெயரளவுக்கு விசாரணை என்ற பெயரில் திசைத் திருப்பும் உத்தியில் மோடி அரசு ஈடு பட்டுள்ளது.





அதானி நிறுவனத்தின் மோசடிகள் குறித்து ஹிண்டன்பர்க் நிறுவனம் வெளியிட்ட ஆய்வறிக்கை குறித்து நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்த வேண்டும் என எதிர்க்கட்சி கள் வலியுறுத்தின. நாடாளுமன்றத்தில் இதுபற்றி விவாதிக்கக்கூடாது என்பதற்காகவே ஆளும் கட்சியினர் நாடாளுமன்றத்தை திட்டமிட்டு முடக்கினர்.

அரசியல் எதிரிகளை பழி வாங்குவதற்காக ஒன்றிய ஆட்சியாளர்களால் அமலாக்கத்துறை மற்றும் வருமான வரித்துறை ஏவிவிடப்படுகிறது. ஆனால் ஹிண்டன்பர்க் மோசடி குறித்து அமலாக்கத்துறை விசாரிக்க வேண்டும் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமலாக்கத்துறை அதிகாரிகளிடம் மனு கொடுப்பதைக் கூட மோடி அரசு தடுத்துவிட்டது.

இப்போது வேறு வழியில்லாமல் அதானி குழுமத்தின் மீது நடவடிக்கை எடுப்பது போல காட்டிக் கொள்வதற்காகவே மும்பை விமான நிலையங்களில் விசாரணை நடைபெற்றுள்ளது. இதனால் எந்தப் பலனும் ஏற்படப் போவதில்லை. ஒருவேளை விசாரணையில் ஈடுபட்ட அதிகாரிகள் வேண்டுமானால் மாற்றப்படலாம். மோடி அரசின் முறைகேடுகளை வெளிப்படுத்திய சி.ஏ.ஜி. அதிகாரிகள் பழிவாங்கப்பட்டுள்ளது இதற்கு சாட்சியாகும். உண்மையை வெளிக் கொணர்வதில் மோடி அரசுக்கு துளி கூட அக்கறை இல்லை. தன்னுடைய கூட்டாளிகளை ஒளித்துவைப்பதிலேயே ஒன்றிய அரசு குறியாக இருக்கிறது.

இவ்வாறு ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் சாடியுள்ளது.

## சிறைவாசிகளின் மத உரிமைகள் மறுக்கப்படுகிறதா?

# முற்றிலும் ஆதாரமற்ற - விஷமத்தனமான குற்றச்சாட்டு!

## சிறைத்துறைத் தலைவர் அமரேஸ் பூஜாரி அறிக்கை!

சென்னை, அக். 17-

வேலூார் மத்தியசிறையில் சிறைவாசிகளின் மத உரிமைகள் மறுக்கப்படுவதாக சமீபமாக அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் வெளியான செய்தி முற்றிலும் ஆதாரமற்ற மற்றும் விஷமத்தனமான குற்றச்சாட்டு ஆகும் என்று சிறைத்துறை தலைவர் - ஏ.டி.ஜி.பி.அமரேஸ் பூஜாரி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

வேலூார் மத்தியசிறை உட்பட தமிழகத்தின் அனைத்து சிறைகளிலும் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் உள்ளிட்ட அனைத்து மதத்தைச் சேர்ந்த சிறைவாசிகளும் எவ்வித சிரமமுமின்றி தங்கள் மத வழிபாட்டைத் தொடரும் வகையில் சமமான மத வழிபாட்டு உரிமையை பெற்றுள்ளனர்.

சிறைச்சாலை வளாகத்தில் அமைந்துள்ள அனைத்து மதங்களின் வழிபாட்டு தலங்களும் சிறை விதிகளின்படி ஏற்கனவே நடைமுறையிலுள்ள வழக்கத்தின் படியும் எவ்வித மாற்றமுமின்றி முழுமையாக இயங்கி வருகின்றன. சிறை வளாகங்களில் அமைந்துள்ள இவ் வழிபாட்டுத் தலங்களுக்கு சிறைவாசிகள் சென்று வழிபடுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். இந்நடைமுறை மத்தியசிறை வேலூார் உள்ளிட்ட தமிழ்நாட்டின் அனைத்து சிறைகளிலும் பின்பற்ற ப்படுகிறது.

நடப்பாண்டு உட்பட ஒவ்வொரு ஆண்டும் புனித ரம்ஜான் மாதத்தில், வேலூார் மத்தியசிறை, உயர் பாதுகாப்பு தொகுதியில் அடைக்கப்பட்டுள்ள முஸ்லீம் சிறைவாசிகள் உள்ளிட்ட அனைத்து முஸ்லீம் சிறைவாசியினரும் தங்கள் தொகுதிகளில் நோன்பு கடைப்பிடிக்கவும் தொழுகை செய்யவும் அனுமதிக்கப்படுகின்றனர். மேலும் தமிழ்நாடு சிறை விதிகள் 1983, விதி எண்.286 (6)ன் படி ரமலான் காலத்தில், நோன்பிருக்கும் முஸ்லீம் சிறைவாசிகள் தங்களுக்கான உணவை தனியாக சமைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவதுடன், தொழுகையின் போது தேவைப்படும் பாய்கள் மற்றும் தண்ணீர் போன்றவை தேவையான அளவு வழங்கப்படுகிறது. தமிழகத்தில் உள்ள அனைத்து சிறைகளிலும் இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது.

இருப்பினும், தமிழ்நாடு சிறை விதிகள் 1983, விதி எண்.286(4)ன் படி பாதுகாப்பு காரணங்களுக்காக எந்த மதத்தைச் சார்ந்த சிறைவாசிகளானாலும் மத வழிபாடு அல்லது மதச்சடங்குகள் மற்றும் நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக பெரிய அளவில் கூட்டம் கூடுவது அனுமதிக்கப்படுவதில்லை. ஆகவே, அனைத்து மதத்தைச் சார்ந்த சிறைவாசிகளும் தங்களது மத வழிபாடு மற்றும் மதச் சடங்குகளை நிறைவேற்றிட சிறைத்துறையின் வரையறுக்கப்பட்ட சட்டதிட்டங்கள் மற்றும் சிறைவிதிகளுக்குட்பட்டே அனுமதிக்கப்படுகின்றனர்.

எனவே, சிறைவாசிகள் சமய உரிமைகள் மாற்றப்படுவதாக செய்தி ஊடகங்களில் வெளியான குற்றச்சாட்டு முற்றிலும் ஆதாரமற்ற, விஷமத்தனமான ஒன்று என்பது மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# வேலூரில் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு கருத்தரங்கு!

## அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் சிறப்புரையாற்றினார்!

வேலூர், அக்.17-

வேலூரில் சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் கருத்தரங்கு நடந்தது. நிகழ்ச்சிக்கு மாநில தி.மு.க. சிறுபான்மை நல உரிமையினர் பிரிவு செயலாளர் சுபேர்கான் தலைமை தாங்கினார். வேலூர் மாவட்ட தி.மு.க. செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, மாநகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்து குமார், முன்னாள் துணை வேந்தர் சபாபதி மோகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில துணைத் தலைவர் எம்.நூருல்லா அனைவரையும் வரவேற்று பேசினார். விழாவில் அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அவர் பேசியதாவது:

நம்முடைய அரசு சிறுபான்மை மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகிறது. மசூதிகளும், தேவாலயங்களை சீரமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முஸ்லிம் மகளிருக்கு உதவும் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் உலமாக்களுக்கு ஓய்வூதியம், நல வாரியம், இலவச சைக்கிள், தையல் எந்திரங்கள் வழங்கப்படுகிறது. சிறுபான்மை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் அரசாக நம்முடைய தி.மு.க. அரசு திகழ்ந்து வருகிறது. குறிப்பாக இட ஒதுக்கீட்டின் மூலம் கல்வி வேலை வாய்ப்பு திட்டங்களை செயல்படுத்தப்படுகிறது. அரசின் திட்டங்களை சிறுபான்மை மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். கேட்பதையெல்லாம் கொடுக்கும் முதல்வராக, நம்முடைய கழகத் தலைவர் தமிழக முதலமைச்சர்

மு .க .ஸ்டாலின் செயல்பட்டு வருகிறார். இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் மு.பாபு, மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில் குமார், ஒன்றியக் குழுத் தலைவர் அமுதா ஞானசேகரன், மாவட்ட பொருளாளர் நரசிம்மன், ஜி.எஸ்.அரசு, பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ் .கதிரேசன், மா.ப. அன்பு நிதி லோகநாதன், கேதயாள மூர்த்தி , சந்திரசேகரன் மாநகர நிர்வாகி கள் நா.அசோகன் ஒய். தேவநேசன் மாநில நிர்வாகிகள் டாக்டர் வி.எஸ். விஜய்,

ஏ. ஆர். முன்னா ஷெரீப், கெம்மாங்குப்பம் கோபி, பிரம்மபுரம் பழனி, சேர்க்காடு கென்னடி, பகுதிச் செயலாளர்கள் ஆர்.இ.பி. சசிகுமார், வி.ஜி.கே.சுந்தர விஜி, முனவர்பாஷா, பி. முருகப் பெருமாள் மண்டலகுழு தலைவர் வீனஸ் .ஆர்.நரேந்திரன், அணிகளின் அமைப்பாளர்கள் ராஜா மார்த்தாண்டன், பி.எம். தேவராஜ், கே.ஆர்.அசோக், மற்றும்மாவட்டப்பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், பிரதிநிதிகள் அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கலந்து கொண்டனர். முடிவில் வேலூர் மாவட்ட அமைப்பாளர் எஸ்.தெள பிக் அகமது நன்றி கூறினார்.

## தி.மு.க. இலக்கிய அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

## இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு

**க**ழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. இலக்கிய அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**சென்னை தெற்கு மாவட்டம்**

**புரவலர்** : எம்.எஸ்.மணி, 42, 4லது தெரு, ராகவன் காலனி, அசோக் நகர், சென்னை600083.

தலைவர் சுப. முத்துவேல் 41, சத்தியமூர்த்தி தெரு, தேவராஜ் நகர், சாலிகிராமம், சென்னை 600093.

**துணைத் தலைவர்** : டி.எஸ். ரவிச்சந்திரன் 25/12/3, இளையாழ்வார் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600015.

**அமைப்பாளர்** கொட்டிவாக்கம் ம. பார்த்திபன், 3/79, முத்தாலம்மன் கோயில் தெரு, கொட்டிவாக்கம், குப்பம் தெரு, சென்னை 600041.

**துணை அமைப்பாளர்கள்**: ஏ.எஸ். பழனி 19/8, பி.கே. மேஸ்திரி தெரு, நியூ காலனி, சைதாப்பேட்டை, சென்னை 600015. பு. ஜவகர்தீன் 18, புதுதெரு, மசூதி காலனி, கிண்டி, சென்னை 600032. வெங்கடேசன் 5, வடக்கு மாட வீதி, கோயம்பேடு, சென்னை 600107. என். மாதவன் 6, முத்துமாரியம்மன் கோவில் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை 600078. ஜி. மூர்த்தி 5/304, முகப்பேர் மேற்கு, சென்னை - 600037. மா.பா. சித்ராலயம் 4/6, பிள்ளையார் கோயில் தெரு, காரம்பாக்கம், சென்னை 600116. மு.பா. நடராஜ் 282, மல்லிகைபூ நகர், அடையார், சென்னை - 600020. ந. நீலகண்டன் 25/62, மதியழகன் தெரு, நேரு நகர், வேளச்சேரி, சென்னை 600042. கே. முத்து 36, வீரவாஞ்சிநாதன் தெரு, பெருங்குடி, சென்னை 600096. தே. புருஷோத்தமன் 8, தேவர் தெரு, அம்பேத்கர் புரட்சி நகர், பெருங்குடி, சென்னை 600096. ஜி. விஜய்கண்ணன் 4/382, ராம்கார்டன், பாலவாக்கம், சென்னை 600041. எம். குருசாமி 3/27, காந்தி சாலை, செம்மஞ்சேரி, சென்னை 600119. க. துரைராஜ் 1752, டி.என்.எச்.பி. காலனி, அயப்பாக்கம், சென்னை 600077. எஸ். முனுசாமி 1/224, 2வது குறுக்குத் தெரு, அபிநந்தன் நகர், நன்மங்கலம், சென்னை 600129. சென்னை அரங்கநாதன் 128, ராணி அண்ணா நகர், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை 600078.

**கரூர் மாவட்டம்**

**தலைவர்** : எம். அரியநாயகம் எண். 181/எ, தியாகி இல்லம், வாங்கல் அஞ்சல், மணிமங்கலம் (தா), கரூர் 639114

**துணைத் தலைவர்** : க.ப. பாலசுப்பிரமணியம் 22, தேர் வீதி, கரூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் 639001.

**அமைப்பாளர்** : புலவர் அ. அருணா பொன்னுசாமி, 24/7, அண்ணா நகர் இரண்டாம் தெரு, கரூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் 639001.

**துணை அமைப்பாளர்கள்** : நா. பத்துமலை காஞ்சேரிக்கா வலசு, கார்வழி அஞ்சல், புகளூர் தாலுக்கா, கரூர் மாவட்டம். பா. எழில்வாணன் கோவில் தெரு, அண்ணா நகர், அரவக்குறிச்சி தாலுக்கா, கரூர் மாவட்டம். ப. செல்வராஜ் 27/820, பள்ள பாளையம், பள்ளபாளையம் அஞ்சல், மண்மங்கலம் தாலுக்கா, கரூர் மாவட்டம் 639002. ம. வீரப்பன் 11/19, பூவாயிபட்டி, கள்ளை அஞ்சல், குளித்தலை தாலுக்கா, கரூர் மாவட்டம் 639110. முனைவர் பி. சுரேஷ்பிரபு 83/எ, மாரியம்மன் கோவில் தெரு, வேடிச்சிபாளையம் அஞ்சல், மண்மங்கலம் தாலுக்கா, கரூர் மாவட்டம் 639114.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 18.
நாள் : 13.10.2023

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்,
தி.மு.க. இலக்கிய அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மன்னை ப. நாராயணசாமி

### அக்டோபர் 17 (1993)



‘தஞ்சை மாவட்ட பெரியார்’ என்று போற்றப்பட்டவர்.

மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் உள்ளிட்ட பொறுப்புகளை ஏற்று திறம்படப் பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் சீடராய், அறிஞர் அண்ணாவின் அன்பைப் பெற்ற இளவலாய், கலைஞருக்கு உற்ற தோழராய் விளங்கியவர்.

தி.மு.க. முப்பெரும் விழா விருதுகள் முதன்முதலாக அறிவிக்கப்பட்டபோது “பெரியார் விருது” பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


# ஆரிய மாயையும், இஸ்ரேல் உருவாக்கமும் - வரலாற்று விபரீதங்கள்!

## ‘மின்னம்பலம்’ இணைய தளத்தில் பேராசிரியர் ராஜன் குறை கிருஷ்ணன் சிறப்புக் கட்டுரை!

**யூ**தர்களின் குடியேற்ற நாடாகிய இஸ்ரேல் அது உருவாகிய காலம் 1940கள் முதலே பாலஸ்தீன மண்ணின் மைந்தர்களாகிய பாலஸ்தீன அரேபிய இஸ்லாமிய மக்களின் உரிமைகளைப் பறித்தும், நிலத்தை ஆக்கிரமித்தும், அவர்களை பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு ஆளாக்கியும் வருகிறது. இன்றைய நிலையில் இஸ்ரேலின் மக்கள் தொகை கிட்டத்தட்ட ஒரு கோடி. பாலஸ்தீனியர்கள் பாலஸ்தீனத்தின் மேற்குப் பகுதியில் முப்பது லட்சம் பேரும், காஸாவில் இருபது லட்சம் பேரும் உள்ளனர். மொத்தம் ஐம்பது லட்சம் பாலஸ்தீனியர்கள். இதைத்தவிர இஸ்ரேல் குடிமக்களாகவும் முஸ்லிம்கள் உள்ளனர்.

**இஸ்ரேல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் யூதர்களின் குடியிருப்பாக வலிந்து உருவாக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போருக்குப் பின் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளின் ஒத்துழைப்புடன் அது ஒரு தேசிய அரசாக நிலைநிறுத்தப்பட்டது. ஆனால் அன்றிலிருந்தே அந்த நிலத்தில் வாழ்ந்த பாலஸ்தீன மக்களின் வாழ்க்கை கேள்விக்குறியானது. அவர்கள் இஸ்ரேலின் இரண்டாம்தர குடிமக்களாக வாழ்வதா, இஸ்ரேலின் மேலாதிக்கத்தில் வாழ்வதா, அவர்களது உரிமைகள் என்ன, அவர்கள் சுயாட்சி எத்தகையது என விடை தெரியாத கேள்விகள் நிலவுகின்றன. இந்தத் துயர வரலாறு மிகவும் நீண்டது; சுருக்கிக் கூற கடினமானது. மகாத்மா காந்தி இங்கிலாந்து ஆங்கிலேயர்களுக்குச் சொந்தமானது என்பது போல பாலஸ்தீனம் பாலஸ்தீன மக்களுக்குச் சொந்தமானது; அங்கே யூதர்களைக் குடியேற்றுவது தவறு என்று 1938ஆம் ஆண்டிலேயே எச்சரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

இன்றைய நிலையில் குறிப்பாக காஸா பகுதி ஒருபுறம் கடலாலும், மற்ற எல்லா திசைகளிலும் இஸ்ரேல் நாட்டாலும் சூழப்




பட்டுள்ளது. காஸாவினுள் பொருட்கள் செல்வதை இஸ்ரேல் கட்டுப்படுத்தி வருகிறது. ஒரு விதத்தில் காஸா ஒரு திறந்தவெளி சிறைச்சாலை எனலாம். இஸ்ரேலின் மேற்பார்வையில், கட்டுப்பாட்டில் உள்ள ஒரு பிரதேசம், இதில்தான் இருபது லட்சம் பாலஸ்தீனியர்கள் வாழ்கிறார்கள். இந்த பகுதி ஹமாஸ் அமைப்பால் ஆளப்பட்டு வருகிறது. கடந்த வாரம் ஹமாஸ் இஸ்ரேலினுள் புகுந்து குடிமக்களைத் தாக்கியுள்ளது. ஏவுகணைகளை இஸ்ரேல் மீது ஏவியது. அதற்குப் பதிலடியாக இஸ்ரேல் காஸாவின் மீது ஏவுகணைகளை ஏவியதுடன், ராணுவத்தையும் காஸாவினுள் அனுப்பியுள்ளது. ஏராளமான மக்கள் கொல்லப்படுகிறார்கள்; சொத்துகள் அழிக்கப்பட்டுள்ளன. மின்சாரம் உட்பட பல அத்தியாவசியப் பொருட்கள் காஸாவினுள் செல்லாமல் இஸ்ரேல் தடுத்துள்ளது.

உலகின் பல்வேறு நாடுகளிலும் உள்ள முற்போக்கு சிந்தனையாளர்கள் ஹமாஸின் வன்முறையைக் கண்டித்தாலும், அதற்கான காரணம் இஸ்ரேல் – பாலஸ்தீனிய சுயாட்சிக்கான ஒரு முறையான அரசியல் தீர்வை காணாததுதான், அதன் ஆக்கிரமிப்பு நோக்குதான் என்பதை சுட்டிக்காட்டுகின்றனர். இஸ்ரேலின் முற்போக்கு சிந்தனையாளர்களே பிரதமர் நெடன்யாஹூ மீதுதான் குற்றம் சுமத்துகின்றனர். அவருக்கெதிராக வெகுமக்கள் கிளர்ச்சிகள் இஸ்ரேலில் நடந்து வருகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை மகாத்மா காந்தியின் கூற்றைத் தொடர்ந்து பாலஸ்தீனிய மக்களின் அரசியல் உரிமைகளுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வந்துள்ளது. பாலஸ்தீனிய தலைவர் யாசர் அராபத் இந்தியாவுக்கு வந்துள்ளார். பிரதமர் இந்திரா காந்தி அவரை வரவேற்றுள்ளார். பாலஸ்தீனியர்களுக்கான சுயாட்சி அரசை உருவாக்க வேண்டும் என்பதே இந்தியாவின் குரலாக இருந்துள்ளது. ஜனதா கட்சி ஆட்சியில் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த அடல் பிஹாரி வாஜ்பேயி இஸ்ரேல் ஆக்கிரமித்த நிலத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று கூறும் காணொலி இப்போது மீண்டும் வலைதளங்களில் காணக் கிடைக்கிறது.

ஆனால், **நரேந்திர மோடி தலைமையிலான பி.ஜே.பி. அரசு இஸ்ரேலுக்கு ஆதரவான அறிக்கைகளை வெளியிட்டது. பாலஸ்தீன பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண வேண்டும் என்று கூறினாலும், இஸ்ரேலின் கடுமையான எதிர் தாக்குதலை,**




**காஸாவிலுள்ள குடிமக்களைக் கொன்று குவிப்பதை இந்தியா கண்டிக்க இன்னும் முன்வரவில்லை. இந்தியாவில் சங் பரிவாரம் சார்ந்த இந்துத்துவர்கள் பலர் இஸ்ரேலுக்கான கடுமையான ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றனர். பாலஸ்தீனியர்களும் முஸ்லிம்கள் என்பதால் ஹமாஸை அழித்தொழிக்க வேண்டும் என்றும், தாங்கள் இஸ்ரேலுக்கு வந்து போராடத் தயாரென்றும் பல்வேறு இந்துத்துவவாதிகள் கூறி வருகின்றனர். முஸ்லிம்களுக்கு எதிரான மதவெறியில் இந்துக்களும், யூதர்களும் ஒன்றுபடலாம் என இவர்கள் கூறுவது தெளிவு.**

**இப்படி இந்துத்துவம் இஸ்ரேலை ஆரத்தழுவுவது ஒரு வரலாற்று முரண் எனலாம். ஏனெனில் ஆரியர்கள் குறித்த கதையாடல்களே ஐரோப்பாவில் யூத வெறுப்பை அதிகரித்தது; அதுவே ஹிட்லரை மிகக் கொடூரமான யூத இன அழிப்புக்கு இட்டுச் சென்றது என்பதுதான் வரலாற்றின் மிகப்பெரிய துயரம். இந்த ஆரிய மாயை எப்படி உருவானது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.**

### ஆரியர்கள், யூதர்கள், பிராமணர்கள்: சில அடையாளங்களின் கதை

பேராசிரியர் டோரதி ஃபிகைரா (Dorathy Figueira, b.1955) ஓர் அருமையான ஆய்வு நூலை சமீபத்தில் எழுதியுள்ளார். அதன் பெயர் Aryans, Jews, Brahmins: Theorizing Authority through Myths of Identity (New Delhi: Navayana, 2015).

இந்த நூல் எப்படி வேத கால ஆரியர்களைப் பற்றி உருவாக்கப்பட்ட மிகையான புகழ்ச்சிகள், கட்டுக்கதைகள் சுருக்கமாகச் சொன்னால், ஆரிய மாயை ஐரோப்பாவில் ஆரிய இனவாதத்தைத் தோற்றுவித்தது, யூதர்கள் மீதான வெறுப்பைப் பரவலாக்கியது என்பதை விரிவான ஆய்வின் மூலம் எடுத்துரைக்கும் நூலாகும்.

இது எப்படி நடந்தது என்றால், பதினாறாம், பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வரும் ஐரோப்பியர்கள் இங்கு புழங்கும் சமஸ்கிருத மொழி குறித்து அறிந்து கொள்கிறார்கள். அந்த மொழியில் ஏராளமான நூல்கள் இருப்பதையும், அவை மிகவும் தொன்மையானவை என்றும் அறிகிறார்கள். அதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல சமஸ்கிருத சொற்களுக்கும், ஐரோப்பிய மொழிகளின் சொற்களுக்கும் நிறைய ஒப்புமைகள் இருப்பதையும் கவனிக்கிறார்கள். சமஸ்கிருத மொழியை பண்டைய இந்தியாவில் பேசியவர்கள் ஆரியர்கள் என்று தெரியும்போது அவர்களுக்கு ஆரிய இனம் பற்றி பெரும் வியப்பு தோன்றுகிறது. பலவிதமான கற்பனைகளும் தோன்றுகின்றன. ஆங்கிலம், ஃபிரெஞ்சு, ஜெர்மனி ஆகிய மொழிகளில் சமஸ்கிருதம் குறித்தும், அதன் இலக்கியம் குறித்தும் எழுதுகிறார்கள். பலர் சமஸ்கிருதம் பயில்கிறார்கள். சமஸ்கிருத நூல்களை தப்பும் தவறுமாக மொழியாக்கம் செய்கிறார்கள். பலர் தங்கள் சொந்த சரக்கையும் சேர்த்து இதுதான் சமஸ்கிருத நூல் என்று எழுதி ஐரோப்பிய மொழிகளில் பிரசுரிக்கிறார்கள்.

**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*



பதினெட்டாம் நூற்றாண்டில் (1700-1800 CE) என்லைட்டன்மெண்ட் என்னும் அறிவொளிக்கால ஐரோப்பிய சிந்தனையாளர்கள் பலருக்கும் கிறிஸ்துவ மத நிறுவனங்கள் மீது கடும் விமர்சனம் நிலவியது. குறிப்பாக கத்தோலிக்க சமய நிறுவனம், அதன் போலித்தனம், போப்பாண்டவர், பாதிரியார்களின் ஊழல் மிகுந்த வாழ்க்கை, அரசியல் தலையீடுகள் எல்லாவற்றின் மீதும் அவர்களுக்கு விமர்சனம் இருந்தது. கிறிஸ்துவமும், அதன் முன்னோடியான யூத மதமும்தான் தங்கள் பண்பாட்டின் வேர்கள் என்று நினைப்பது அவர்களுக்கு உவப்பாக இல்லை.

அந்த நிலையில் சமஸ்கிருதம், ஆரிய பண்பாடு குறித்து கேள்விப்பட்டதும் ஐரோப்பிய சிந்தனையாளர்கள் பலர் ஆரியமே யூதர்களைவிட மூத்த பண்பாடு, அதுவே உலக நாகரிகத்தின் துவக்கம், ஐரோப்பியர்களின் பண்பாடும் ஆரிய பண்பாட்டின் தொடர்ச்சிதான் என்று நம்பத் தலைப்படுகிறார்கள். முற்போக்கான அரசியல் சிந்தனை களுக்காகவே அந்த ஐரோப்பிய சிந்தனை யாளர்களை அறிந்துள்ள நாம், அவர்களது ஆரிய மோகத்தைக் குறித்து கவனித்ததில்லை.


பெல்ஃபோர்

உதாரணமாக வோல்டேரை (Voltaire, 1694-1778) எடுத்துக்கொள்வோம். அரசியல் கோட்பாடுகளில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவர். ஃபிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட சிந்தனையாளர்களில் ஒருவர். வோல்டேர் அவருக்குக் கிடைத்த அரைவேக்காட்டு ஆய்வு நூல்களின் அடிப்படையில் ஆரியர்களே உலக பண்பாடுகளின் தோற்றுவாய் என அறுதியிட்டுக் கூறுகிறார். வேதங்கள் என்ன என்று தெரியாமலேயே வேதங்களே பண்பாட்டின் துவக்கம் என்று கூறுகிறார். பிராமணர்களே உலகின் முதல் இறையியலாளர்கள். சீனா, எகிப்து, ஜப்பான் என எல்லா நாடுகளிலிருந்தும் சென்று பிராம ணர்களிடமே இறையியல் பயின்றார்கள் என்றெல்லாம் அவர் கூறுகிறார். யூதர்கள் பிராமணர்களிட மிருந்துதான் தங்கள் சிந்தனைகளை களவாடினார்கள் என்று கூறுகிறார். அவருக்கு யூதர்களை அறவே பிடிக்காது.

வோல்டேரைப் போல பலரும் ஆரியமே பண்பாட்டின் ஆதி மூலம், யூதர்கள் அதற்குப் பின் வந்தவர்கள்தான் என்று எழுதுகிறார்கள். யூத, கிறிஸ்துவ மதங்களின் முன்னோடி ஆதி ஆரிய மதமே என்று நினைக்கிறார்கள். அதாவது வேதங்களுக்கும் முன்பு பிரம்மம் என்ற ஒற்றைக் கடவுளை சிந்தித்த மதம் என்று ஆரிய மதத்தை புகழ்கிறார்கள். ஆனால் இந்தியாவில் அந்த ஆதி மதம் பின்னால் சீரழிந்துவிட்டது. பல்வேறு கடவுள்கள், புராணங்கள், பலியிடும் சடங்குகள் என சின்னா பின்ன மாகி விட்டது என்றும், அதற்கு இந்தியாவின் தட்பவெப்பமே காரணம் என்றும் பலர் எழுதுகிறார்கள்.

ஐரோப்பிய காலனீய சிந்தனை இதை இறுகப் பற்றிக்கொள்கிறது. பண்டைய இந்தியாவின் ஆரியப் பண்பாடு மிகவும் உயர்ந்தது. ஆனால் அது காலப்போக்கில் சீரழிந்து பலதெய்வ வழிபாடுகளாக, ஜாதியமாக, மூட நம்பிக்கைகளாக, புராணக் கதைகளாக சிதைந்து, தேங்கிப் போய் விட்டது. ஐரோப்பியர்கள்தான் அந்தத் தேக்கத்திலிருந்து இந்தியாவை மீட்டு மீண்டும் முன்னேற்றப் பாதையில் செலுத்த வேண்டும் என்று தொடர்ந்து எழுதுகிறார்கள். அது ஒருபுறம் காலனீய ஆக்கிரமிப்பை நியாயப்படுத்த உதவினாலும், மற்றொரு புறம் ஆரிய பண்பாடே இந்திய, உலகப் பண்பாட்டின் தோற்றுவாய், பிராமணர்களே உலகின் முதல் இறையியலாளர்கள் என்றெல்லாம் மிகையான கற்பிதங்களையும் சேர்த்தே பரப்புகிறது.

**பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தப் பண்பாடு குறித்த சிந்தனை இனவாதமாக (Racism) மாறுகிறது. அதாவது உடற்கூற்றின் அடிப்படையில் ஆரியர்களை பிரித்து அறியலாம் என்ற எண்ணம் ஐரோப்பாவில் வலுவடைகிறது. தோலின் நிறம், தாடை, மூக்கு ஆகியவற்றின் அமைப்பு, உயரம், கண்களின் நிறம் என்பன போன்ற அடையாளங்கள் மூலம் தூய ஆரிய ரத்தம் உடையவர்கள் யார் என்பதைக் காணலாம் என்று நினைக்கத் தொடங்குகிறார்கள். ஆனால் இந்தியாவின் ஆரியர்களுக்கு இது பொருந்தாது. இந்தியாவில் ஆரியர்களுக்கு அங்கிருந்த கறுப்பு நிற மனிதர்களுடன் ரத்தக்கலப்பு ஏற்பட்டுவிட்டது. அதனால் இந்தியர்கள் யாரும் ஆரியர்கள் இல்லையென ஐரோப்பிய ஆரிய இனவாதிகள் நினைத்தார்கள்.**

**இந்தியாவில் ஆரியர்கள், ஆரியர் அல்லாதவர்கள், திராவிடர்கள் ஆகியவை பண்பாட்டு அடையாளங்களாகப் பார்க்கப்பட்டனவேயன்றி, உடற்கூறு சார்ந்த இனமாகப் பார்க்கப்படவில்லை. பிராமணர்கள் தங்களை ஆரியர்கள் எனக் கருதிக் கொண்டாலும், தீண்டாமை போன்றவற்றை கடைப்பிடித்தாலும், அவர்கள் வரலாற்றுக் காலம் முன்பிருந்தே பிற இனங்களுடன் கலந்து வாழ்ந்ததால் உடற்கூறு என்ற அளவில் வேறுபடுத்துவது சாத்தியமில்லை எனலாம். வேதங்களிலேயே இனக்கலப்பு பேசப்பட்டிருப்பதை தொமிலா தாப்பர் போன்றவர்கள் சுட்டிக்காட்டு கிறார்கள். ஆனால் வட இந்தியர்களும், தென்னிந்தியர்களும் வேறு, வேறு பண்பாட்டைச் சேர்ந்தவர்கள் என்று விவேகானந்தரே அமெரிக்க சொற்பொழிவில் கூறுகிறார். தென்னிந்தியர்கள் திராவிட பண்பாட்டைச் சேர்ந்தவர்கள். அவர்கள் வர்ண தர்மத்தை உருவாக்கிய ஆரிய பண்பாட்டைச் சேர்ந்தவர்களல்ல என்பது திராவிட சித்தாந்தம்.**

ஆனால் ஐரோப்பாவில் யூதர்கள் மீதான பண்பாட்டு விமர்சனம், வெறுப்பு போன்றவை இந்த ஆரிய இன அடையாளவாதத்துடன் சேர்ந்தபோதுதான் ஹிட்லரின் யூத இன அழிப்புக் கோட்பாடு இருபதாம் நூற்றாண்டில் தோன்றியது. ஹிட்லரின் ஜெர்மானிய படைகள் 1941 முதல் 1945 வரை கிட்டத்தட்ட அறுபது லட்சம் யூதர்களைக் கொன்று குவித்தது. யூதர்களை முதலில் தனிமைப்படுத்தி கான்செண்ட்ரேஷன் காம்ப் என்னும் முகாம்களில் தங்கவைத்தார்கள். பின்னர் அவர்களை பலவகைகளில் கும்பல், கும்பலாகக் கொன்றார்கள். இந்தக் கொடூர நிகழ்வு ஹோலோகாஸ்ட் என்று அழைக்கப்படுகிறது.

### இஸ்ரேல் உருவாக்கம்

பாலஸ்தீனம் ரோமப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த காலத்திலேயே யூதர்கள் அங்கிருந்து இடம்பெயரத் தொடங்கி விட்டார்கள். அதன்பின் அப்பகுதி முழுவதும் அரேபிய, இஸ்லாமிய ஆட்சிக்கு உட்படுவதற்கு முன்னமே யூதர்கள் பெருமளவு இடம்பெயர்ந்து ஐரோப்பா முழுவதும் குடி யேறி விட்டார்கள். யூதர்கள் தனியான ஒரு மத அடையாளத்துடன், பண்பாட்டுடன் வாழ்ந்தார்கள். அவர்களில் சிறந்த சிந்தனையாளர்கள், கலைஞர்கள் பலர் தோன்றினாலும், அவர்கள் முக்கியமாக பணத்தை வட்டிக்கு தருபவர்களாகவும் இருந்துள்ளார்கள். அதனால் செல்வந்தர்களாக இருந்தார்கள். இதன் காரணமாக பெரும்பான்மை கிறிஸ்துவ மக்களுக்கு அவர்கள் மீது ஒவ்வாமை பல நூற்றாண்டுகளாக நிலவி வந்துள்ளது. ஷேக்ஸ்பியரின் வெனிஸ் நகரத்து வியாபாரி நாடகத்தில் வரும் இரக்கமற்ற வட்டிக்காரன் ஷைலக் பாத்திரம் புகழ் பெற்றது.




இந்த நிலையில்தான் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே யூதர்கள் அவர்கள் ஆதி நிலமான இஸ்ரேல்/பாலஸ்தீனத்துக்குத் திரும்புவது குறித்த சொல்லாடல் உருவாகத் தொடங்கியது. சிறிது, சிறிதாக சிலர் சென்று குடியேறத் தொடங்கினார்கள். இது முதல் உலகப் போருக்குப் பின் வலுவடைந்தது. பாலஸ்தீனப் பகுதி பிரிட்டிஷ் கட்டுப்பாட்டுக்குள் வந்ததால் இது சாத்தியமாகியது. இங்கிலாந்தின் மந்திரிகளில் ஒருவரான பெல்ஃபோர் 1917ஆம் ஆண்டு யூதர்களுக்கான ஒரு தாயகத்தை உருவாக்குவதாக அறிவித்தார். இது குடியேற்றங்களை அதிகரித்தது. ஆனால், ஹிட்லரின் யூத அழிப்பு இஸ்ரேல் என்ற தேசத்தை உருவாக்குவதைக் கட்டாயமாக்கியதுடன், அதை உலகின் பார்வையில் நியாயப்படுத்தவும் செய்தது. அதனால் சர்வதேச அமைப்புகள் பாலஸ்தீனத்தில் வாழ்ந்து வந்த மண்ணின் மைந்தர்களான அரேபிய முஸ்லிம்களைப் பற்றி கவலைப்படவில்லை எனலாம். யூதர்களின் தேசமாக இஸ்ரேல் உருவானபின் அங்கிருந்த பாலஸ்தீனியர்களின் நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டன. அவர்கள் பலர் துரத்தியடிக்க ப்பட்டார்கள். இரண்டாம்தர குடிமக்கள் ஆக்கப்பட்டார்கள். அதிலிருந்து துவங்கியதுதான் தங்கள் உரிமை மீட்புக்கான பாலஸ்தீனியர்கள் போராட்டம்.

தங்களை ஆரியப் பண்பாட்டின், அதன் சனாதன தர்மத்தின் வாரிசுகளாகக் கருதிக்கொள்ளும் இந்துத்துவர்கள் இன்று யூதர்களின் இஸ்ரேலுக்கு ஆதரவாகப் பேசுவது ஒரு வரலாற்று முரண் அல்லவா? இஸ்லாமிய வெறுப்பே அவர்களை இன்று இணைக்கிறது. இன, மத அடையாள வெறுப்புச் சொல்லாடல்களுக்கு என்றைக்குத் தான் மானுடம் முடிவு கட்டி, “ஒன்றே குலம், ஒருவனே தேவன்” என ஒன்றுபடும் என்று தெரியவில்லை.

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்

---

அ.தி.மு.க. ஆட்சியில் நகர்ப்புற

# ஏழைகளுக்கான வீட்டுவசதி திட்டத்தை செயல்படுத்துவதில் குளறுபடிகள்!

## கணக்கு தணிக்கை ஆணையர் அறிக்கை!

*சென்னை, அக். 17 - “நகர்ப்புற ஏழைகளுக்கான வீட்டுவசதித் திட்டத்தை செயல்படுத்துவதில் ஏற்பட்ட குளறுபடி காரணமாக, அ.தி.மு.க. ஆட்சியில் சென்னை, கோவை, மதுரையில் குடிசைப் பகுதிகளின் எண்ணிக்கை 378ல் இருந்து 616 ஆக அதிகரித்துள்ளது’’ என்று கணக்கு தணிக்கை ஆணையர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து கணக்கு தணிக்கை ஆணையர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:*

*தமிழ்நாடு அரசின் நகர்ப்புற ஏழைகளுக்கான வீட்டுவசதித் திட்டத்தில் 2015 முதல் 2021ம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் முழுமையான திட்டமிடுத லின் தன்மை, உள் கட்டமைப்பு வசதிகள், பயனாளிகளை அடையாளம் காண்பது, பயனாளிகளின் பங்கை நிர்ணயம் செய்வது, குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்வது மற்றும் அதன் பயன்பாடு, பராமரிப்பு ஆகியவற்றுடன் வீட்டு வசதிகளை வழங்குவது உள்ளிட்டவற்றை மதிப்பீடு செய்வதற்காக, ஜூலை 2021 முதல் ஜனவரி 2022 வரையில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.*

*இதில் மாநிலத்தில் மொத்தம் 13.92 லட்சம் வீடுகள் தேவை இருக்கும் போது, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் 2015 - 2021 கால கட்டத்தில் 7.08 லட்சம் வீடுகளை மட்டுமே கட்ட மட்டுமே அனுமதி பெற்றிருந்தது. இதில் 3.44 லட்சம் வீடுகளின் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டும், 3.64லட்சம் வீடுகளின் கட்டுமானப்பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளது. இந்நிலையில், பயனாளிகள் வாங்கும் திறனுக்கேற்ப தமிழ்நாடு நகர்ப்புற வீட்டு வசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஏற்படுத்தும் கொள்கையை உருவாக்குவதில் காலதாமதம் ஏற்பட்டது.*

*இதனால், மார்ச் 2020ல் மாநிலக் கொள்கையை உருவாக்கிய பிறகு, தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டம் 1971ல் திருத்தம் இன்னும் செயல்பாட்டில் உள்ளது. நிறுவன கட்டமைப்பு, ஆணை, பாத்திரங்கள் மற்றும் பொறுப்புகள். வீட்டு வசதிக் கொள்கை நோக்கங்களை அடைவதற்கான திட்டங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கும் என்று அரசு 2022ம் ஆண்டு பதிலளித்தது. கொள்கை மற்றும் சட்ட திருத்தம் ஆகியவை பணியின் தொடக்க கட்டத்தில் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதால் பதில் ஏற்கத்தக்கது அல்ல.*

*அவ்வாறு செய்யத் தவறியதால், தனியார் கூட்டாண்மை மற்றும் நிதியுதவி போன்ற முக்கிய வீட்டுத் திட்டங்களுக்கான தீர்வுகள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டது. அண்டை மாநிலங்களான கேரளா மற்றும் கர்நாடகா ஆகியவை முறையே 2011 மற்றும் 2016ல் கொள்கையை வகுத்துள்ளன. மேலும் 2019-21ம் ஆண்டுகளில் கூட்டு திட்டங்களில் பயனாளிகள் வாங்கும் திறனுக்கேற்ப வீடுகள் ஏற்படுத்தும் வருடாந்திரத் திட்ட முன்மொழிவுகளை 19.81 சதவீதம் மட்டுமே மத்திய அனுமதி மற்றும் கண்காணிப்புக் குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. மத்திய அனுமதி மற்றும் கண்காணிப்பு குழு கடந்த 2021ம் ஆண்டு பிப்ரவரியில் 78 நகரங்களைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டது.*

*மேலும் அனைவருக்கும் உடனடியாக வீட்டுவசதி செயல் திட்டத்தை சமர்ப்பிக்குமாறு தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டது. இருப்பினும், ஆய்வுகள் எதுவும் நடத்தப்படவில்லை மற்றும் அனைவருக்குமான வீட்டுவசதி செயல் திட்டம் மார்ச் 2021 வரை சமர்ப்பிக்கவில்லை. வருடாந்திர திட்டத்தில் மார்ச் 2022ம் ஆண்டு வரை அனுமதிக்கப்பட்ட குடியிருப்புகளின் கட்டுமானப்பணிகள் நீட்டிக்கப் பட்ட காலத்தில் முடிக்கப் ப்பட வேண்டும் என்றும் மார்ச் 2022க்கு மேல் கூடுதல் ஒப்புதல் வழங்கப்படமாட்டாது என்ற நிபந்தனைகளுடன் இத்திட்டம் டிசம்பர் 2024 வரை நீட்டிக்க ப்பட்டது.*

*ஜனவரி 2022ம் ஆண்டு வெளியிடப்பட்ட அனைவருக்கும் நகர்ப்புற வீட்டு வசதி திட்டம் செயல்பாட்டிற்கான ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்களில் வீட்டு வசதி தேவை கணக்கெடுப்பு நடத்தப்பட வலியுறுத்தப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட திட்ட தேவைகளைப் பெற திட்ட வாரியான கணக்கெடுப்பு மேற்கொள்ளலாம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. கணக்கெடுப்பிற்கான அத்தியாவசியத் தேவை இருந்த போதிலும், மார்ச் 2018க்குப் பிறகு. எந்தவிதமான கணக்கெடுப்பும் மேற்கொள்ளப்படவில்லை.*

*2014 முதல் 2018 வரையிலான நான்கு ஆண்டுகளில், சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மூன்று நகரங்களில் குடிசைப்பகுதிகளின் எண்ணிக்கை 376ல் இருந்து 616 ஆக அதிகரித்து உள்ளது. மூன்று நகரங்களில் குடிசைகள் 378ல் இருந்து 616 ஆக அதிகரித்தது மொத்தம் 62.96 சதவிகிதமாகும், குடும்பங்களின் வளர்ச்சி 65.95 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. நான்கு ஆண்டுகளுக்குள், சென்னை மற்றும் கோவையில் குடிசைகளின் எண்ணிக்கை அதிகரித்தது. சென்னையில் ஏற்றுக்கொள்ள முடியாத குடிசைகளின் எண்ணிக்கையில் 91.91 சதவீதம் வேகமாக அதிகரிப்புடன், சென்னையில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையில் 73.69 சதவீதம் அதிகரிப்புடன் இருந்தது.*

*மதுரையில் ஏற்றுக்கொள்ள முடியாத குடிசைகளின் எண்ணிக்கை அதிகரிக்கவில்லை என்றாலும், குடும்பங்களின் எண்ணிக்கை 6 சதவீதம் அதிகரித்துள்ளது. மொத்த தேவையான 13.92 லட்சம் குடியிருப்புகளில் 24 சதவீதம் மட்டுமே அதாவது, 3.44 லட்சம் குடியிருப்புகள் முடிக்கப்பட்டுள்ளது. 2015 16 மற்றும் 202-021க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தேவையை பூர்த்தி செய்வதில் ஏற்பட்ட இந்த இடைவெளி, குடிசைகளின் தொடர்ச்சியான இருப்பு மட்டுமின்றி, குடிசை பகுதிகள் அகற்றப்பட்ட போதிலும் குடிசைகளின் அதிகரிப்புக்கும் பங்களித்தது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.*

---

தமிழ்நாடு முழுவதும் அனைத்துப் பள்ளிகளிலும்

# குழந்தை திருமணம் இல்லா தமிழ்நாட்டை உருவாக்குவோம்!

## ஆசிரியர்கள் - மாணவர்கள் உறுதிமொழி ஏற்பு!

*சென்னை, அக். 17 - தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில், அக்டோபர் 16ம் தேதி திங்கட்கிழமை காலையில் குழந்தை திருமண எதிர்ப்பு உறுதிமொழி எடுக்க வேண்டும் என பள்ளிக்கல்வி துறை சார்பில் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருந்தது. அதன்படி தமிழ்நாடு முழுவதும் நேற்று காலை பள்ளிகள் திறந்ததும் வழக்கமான காலை வழிபாட்டுக்கூடத்தில் ஆசிரியர்கள் முன்னிலையில் மாணவர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். சென்னையில், அசோக் நகரில் உள்ள பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், ஆசிரியர்களும் மாணவிகளும் அங்குள்ள காலை வழிப்பாட்டு கூடத்தில் கூடி குழந்தை திருமண எதிர்ப்பு மற்றும் குழந்தை திருமணம் இல்லா தமிழ்நாட்டை உருவாக்குவோம் என உறுதிமொழி ஏற்றனர்.*

*பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு புதுமைத் திட்டங்களை தீட்டி சிறப்பாக செயல்படுத்தி வரும் திராவிட மாடல் அரசு, பெண்களின் வளர்ச்சிக்கு பெரும் தடையாக இருக்கும் குழந்தை திருமணத்தை முற்றாக ஒழிக்க முயற்சி மேற்கொண்டுள்ளது.*



திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், பொன்மலைப்பட்டியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் தாய் – சேய் நலனை மேம்படுத்தும் வகையில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்வில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 15.10.2023 அன்று கலந்து கொண்டு, கர்ப்பிணி பெண்களுக்கு தட்டு, மஞ்சள், குங்குமம், பூ. பழம் மற்றும் பொன்னான ஆயிரம் நாட்கள் குறித்த மடிப்பேடு அடங்கியப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.அபிராமி, சமூக ஆர்வலர் திருமதி.ஜனனி மகேஸ் பொய்யாமொழி, திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்) திருமதி.நித்யா, மண்டலத் தலைவர் மு.மதிவாணன், மாமன்ற உறுப்பினர் தர்மராஜ், கூத்தைப்பார் பேரூராட்சித் தலைவர் செல்வராஜ், கங்காதரன், மாமன்ற உறுப்பினர் ரமேஷ் அங்கன்வாடி பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 30 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**தஞ்சைப் பெரியார், முன்னாள் அமைச்சர்**

## மன்னை ப.நாராயணசாமி

அவர்கள்



“எறும்பனையர் எம் மறவர் இன்னனையர் நம் மன்னை”
– பேரறிஞர் அண்ணா

“மன்னை எனது அன்னை”
– முத்தமிழ் அறிஞர் கலைஞர்

............... என்றும் உங்கள் வழியில் பேரன் ...............

**மன்னை த.சோழராஜன் B.E.,**

நகர்மன்றத் தலைவர் – மன்னார்குடி
( மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் )



வேலூரில் நடந்த சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு கருத்தரங்கில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசிய போது எடுத்த படம். அருகில் வேலூர் மாவட்ட தி.மு.க. செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாநகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலு விஜயன், மாநகர மேயர் சுஜாதா ஆனந்தகுமார், அமைப்பாளர் எம்.நூருல்லா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### மயிலை அருள்மிகு கபாலீசுவரர்

# கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நவராத்திரி பெருவிழா!

## திருமதி. துர்கா ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, அக். 17 -

திருக்கோயில்கள் சார்பில் சென்னை, மயிலாப்பூர், கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் 10 நாட்கள் நடத்தப்படும் நவராத்திரி பெருவிழா நேற்று முன்தினம் (15.10.2023) தொடங்கியது. இவ்விழாவினை முதலமைச்சர் அவர்களின் துணைவியார் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

திருக்கோயில்கள் சார்பில் சித்தர்களுக்கும், அருளாளர்களுக்கும் விழா எடுத்து சிறப்பு செய்யப்பட்டு வருகிறது. அந்தவகையில், கமல முனி சித்தர், பாம்பாட்டி சித்தர், சுந்தரானந்த சித்தர் ஆகிய சித்தர் பெருமக்களுக்கும், திருஅருட் பிரகாச வள்ளலார், தெய்வப் புலவர் சேக்கிழார், சமய குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசர் (அப்பர் பெருமான்), நாலாயிர திவ்ய பிரபந்த தமிழ் மறைநூலினைத் தொகுத்தவரான ஸ்ரீமத்நாத முனிகள் மற்றும் அவரது பெயரன் ஆளவந்தர் ஆச்சாரியார் போன்ற அருளாளர்களுக்கும் திருக்கோயில் சார்பில் விழா எடுத்து சிறப்பு செய்யப்பட்டுள்ளது. தமிழ் மூதாட்டி ஔவையாருக்கு மணிமண்டபம் அமைக்கவும், வான்புகழ் கொண்ட திருவள்ளுவர் திருக்கோயிலை புனரமைக்கவும் விரைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்தாண்டு 5 திருக்கோயில்கள் சார்பில் மகா சிவராத்திரி பெருவிழாவினை பக்தர் கள் பங்கேற்புடன் விமரிசையாக நடத்தப்பட்டது.

உலகில் தீமைகளை அழித்து தர்மத்தை நிலை நாட்டுகின்ற சக்தி வழிபாட்டின் தத்துவங்களை உணர்த்துகின்ற தொடர் நிகழ்வாக கொண்டாடப்படும் நவராத்திரி பெருவிழா இந்தாண்டு திருக்கோயில்கள் சார்பில் சென்னை, மயிலாப்பூர், கபாலீசுவரர் திருமண மண்டபத்தில் கொலுவுடன் 15.10.2023 முதல் 24.10.2023 வரை 10 நாட்கள் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவினை முதலமைச்சர் அவர்களின் துணைவியார் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து, கொலுவை பார்வையிட்டதோடு, இன்று நடைபெற்ற சகலகலாவல்லி மாலை பூஜையில் கலந்து கொண்ட மாணவ, மாணவியருக்கு நோட்டுப் புத்தகங்கள், பேனா, பென்சில் உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்கினார். நிறைவாக, மாம்பலம் சகோதரிகள் திருமதி ஆர். விஜயலட்சுமி மற்றும் திருமதி ஆர்.சித்ரா ஆகியோரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

நேற்று (16.10.2023) கன்யா பூஜையும், அதனைத் தொடர்ந்து தேவி மஹாத்மியம், நவாவரண பூஜை. லலிதா சகஸ்ரநாமம், திருவிளக்கு பூஜை, சௌந்தர்ய லகரி, சுஹாசினி பூஜை, இசை வழிபாடு, அபிராமி அந்தாதி என தினந்தோறும் ஒரு வழிபாடும், திரையிசை பாடகர் வினயா கார்த்திக் ராஜன் குழுவினர் இன்னிசை, இசைத் தென்றல் கலைமாமணி வீரமணி ராஜூ குழுவினரின் பக்தி இன்னிசை, தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் நுண்கலை பல்கலைக்கழகம் துணைவேந்தர் டாக்டர் சௌமியா ஏற்பாட்டிலான குழு இசை நிகழ்ச்சி, இசைப்பேராளி காயத்ரி வெங்கட்ராகவன் குழுவினரின் பக்தி இன்னிசை, கந்தர்வகான இளவல் வீரமணி கண்ணன் குழுவினரின் இன்னிசை, தமிழிசைச்சுடர் சுசித்ரா பாலசுப்பிரமணியம் குழுவினரின் பக்தி இன்னிசை, இசைப்பேரரசி நித்யா மகாதேவன் குழுவினரின் பக்தி இன்னிசை இசைப் பேரொளி மஹதி வழங்கும் கர்நாடக இன்னிசை, சுருதி லயா இசைக்குழுவினரின் இன்னிசை என தினந்தோறும் ஒரு இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. இவ்விழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்க பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி. ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் திருமதி கி.ரேணுகாதேவி, திருமதி ஜ.முல்லை மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி மதுரை வடக்கு மாவட்டம் சோழவந்தான் தொகுதியில் சேலம் இளைஞர் அணி மாநாடு, கழக இளைஞரணி உறுப்பினர் சேர்த்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் குறித்த சோழவந்தான் பேரூர் செயல் வீரர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் சுப.த.சம்பத், கழக நிர்வாகிகள் சோமசுந்தர பாண்டியன், சி.புதூர் சேகர், நேரு பாண்டியன், சிறைச்செல்வன், சத்திய பிரகாஷ், ஜெயராமன், கண்ணன், மருது பாண்டியன், இளைஞரணி நிர்வாகிகள் வெற்றி செல்வம், மருதுராஜா, இளங்கோவன், குமரேசன் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.

### மு.தென்னவன் – தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., பங்கேற்பு!

# காளையார்கோவிலில் கலைஞர் நூற்றாண்டு பொதுக்கூட்டம் - நலத்திட்ட உதவிகள்!

## ஆ.ராசா.எம்.பி. – அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிறப்புரை!

சிவகங்கை. அக்.17-

சிவகங்கை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் சார்பில் பொதுக்கூட்டங்கள், நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக காளையார் கோவில் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் இன்று (17ஆம் தேதி - செவ்வாய்க்கிழமை) மாலை 4-00 மணி அளவில் காளையார் கோவில் தெப்பக்குளம் கீழ்கரையில் ஒன்றிய கழகச் செயலாளர் வே.ஆரோக்கியசாமி தலைமையில் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் பொதுக்கூட்டம் மற்றும் 7000 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

ஒன்றியச் செயலாளர் வே.ஆரோக்கியசாமி தலைமையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளரும் முன்னாள் ஒன்றிய அமைச்சருமான ஆ.ராசா. எம்.பி.சிறப்புரை ஆற்றுகிறார். ஒன்றியச் செயலாளர்கள் யோக.கிருஸ்ண குமார், ஆர்.எம்.கென்னடி ஆகியோர் வரவேற்றுப் பேசுகிறார்கள்.

இந்த பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரிய கருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. ஆகியோர் பேசுகிறார்கள். இந்த கூட்டத்தில் மாவட்டம் முழுவதிலுமிருந்து மாவட்டக் கழக, ஒன்றிய நகர,பேரூர் நிர்வாகிகள் கலந்து கொள்கிறார்கள். கூட்டமுடிவில் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு பாகமுகவர்களுக்கு கைபேசிகள், மாற்றுத்திறனாளிகள் முதியோர்களுக்கு உதவிகள் உட்பட 7000பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் , துணை பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி.முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ.ஆகியோர் வழங்குகிறார்கள்.

பொதுக்.கூட்டத்திற்கான ஏற்பாடுகளை கிழக்கு ஒன்றியச் செயலாளர் வே. ஆரோக்கியசாமி தலைமையில் ஒன்றிய கழக நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். இராகவானந்தம்

**அக்டோபர் 17 (1999)**



திராவிட இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர்.

தொழிற் சங்கத் தலைவராக பணியாற்றியவர்.

தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக அமைச்சராகவும் பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சு. ஜம்புலிங்கம்

**அக்டோபர் 17 (2004)**



இளமைக் காலத்திலேயே தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு, மாவட்ட பிரதிநிதியாகவும், வட்டக் கழகச் செயலாளராக பத்து ஆண்டுகளுக்கு மேலாகவும், பகுதிச் செயலாளராகவும், மாவட்ட துணைச் செயலாளராக இருமுறையும், பொதுக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர். கலைஞர் நகர் பகுதி உருவாக்கியபோது, அப்பகுதிக் கழகத்தின் முதல் பொறுப்பாளராகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

சென்னை மாநகராட்சி 131வது வார்டு கவுன்சிலராக இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதியில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## சாதி, மத பேதமின்றி

# மகளிர் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துகிறது தமிழ்நாடு அரசு!

## கழக மகளிர் மாநாட்டில் – மெகபூபா முப்தி – பெண் தலைவர்கள் புகழாரம்!

சென்னை, அக். 17–

“சாதி, மதம் பேதமின்றி அனைவருக்கும் பொதுவான மகளிர் நலத்திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது” என்று காஷ்மீர் முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தி தமிழ்நாடு அரசுக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

சென்னை, நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் தி.மு.க. மகளிரணி சார்பில் “மகளிர் உரிமை மாநாடு” தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், அகில இந்திய முன்னாள் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் பிரியங்கா காந்தி மற்றும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பெண் தலைவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

அதன் விவரம் வருமாறு:–

**மெகபூபா முப்தி (காஷ்மீர் முன்னாள் முதல்வர்):**

பெண்களின் உரிமைகளுக்காக வாழ்நாள் முழுவதும் குரல் கொடுத்தவர் கலைஞர். ஆட்சியாளராக மட்டும் அல்லாது எழுத்தாளராகவும் பெண்களின் உரிமைக்காக குரல் கொடுத்தவர். அதன்படி, அவரின் வழியில் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்பாக ஆட்சி நடத்தி வருகிறார். இலவச பேருந்து பயணம், மகளிர் உரிமைத் தொகை, கல்லூரி மாணவிகளுக்கு மாதம் ரூபாய் ஆயிரம் என தி.மு.க. அரசின் திட்டங்கள் மகத்தானவையாகும். தமிழ்நாட்டில் சாதி, மதம் பேதமின்றி அனைவருக்கும் பொதுவாக மகளிர் நல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் பெண்களுக்கான உரிமைகள் குறித்த ராஜிவ் காந்தியின் கனவும் நனவாகும்.

**சுஷ்மிதா தேவ் (திரிணாமூல் காங்கிரஸ் செய்தி தொடர்பாளர்):**

சமூக நீதி, சமத்துவத்துக்காக வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர் கலைஞர், நலத்திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாட்டில் உள்ள அரசு முன்னிலையில் உள்ளது. தற்போது, மகளிர் இடஒதுக்கீடு அமலுக்கு வரும் என்பதற்கு எந்தவித உத்தரவாதமுமில்லை. ஏனெனில், அவை பெயர் அளவிற்கு மட்டுமே கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும், மகளிர் இடஒதுக்கீட்டை அமலுக்கு கொண்டுவருவதில் பா.ஜ. அரசு அக்கறை காட்டவில்லை.

**டிம்பிள் யாதவ் (சமாஜ் வாதி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்) :**

முற்போக்கு சிந்தனையாளர் கலைஞர் நூற்றாண்டு விழாவை நாம் சிறப்பாக கொண்டாடி வருகிறோம். மகளிர் உரிமை பாலின சமநிலை, பெண்களுக்கு சொத்தில் உரிமை என பல்வேறு திட்டங்களிலும் சமாஜ்வாதி கட்சி அரசுக்கு தமிழ்நாடு தான் முன்மாதிரி மாநிலமாக திகழ்ந்தது. மேலும், தற்போதைய மோடியின் ஆட்சியில் இன்றைய இந்தியா பின்னோக்கி செல்கிறது என்பதற்கு மணிப்பூர் மாநிலமே உதாரணமாகும்.

**ஹானி ராஜா (இந்திய கம்யூனிஸ்ட் தேசிய செயற்குழு உறுப்பினர்):**

பெண்களின் முன்னேற்றத்திற்காக ஏராளமான உரிமைகளை கலைஞரும் தி.மு.க.வும் தான் பெற்றுத்தந்துள்ளது. கடந்த 75வருட போராட்டங்களை பறிக்கும் விதமாக இன்றைய மோடி அரசு உள்ளது. இந்தியாவை ஒழிக்கவே நரேந்திர மோடி நினைக்கிறார். மேலும், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் முன்பும் இருந்தாலும் இப்போது எண்ணிகையில் மிக அதிகமாகவும் மிக கொடூரமாகியும் விட்டன.

**சுபாஷினி அலி (மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்):**

சமத்துவ முழக்கத்திற்காக முரசொலியை கொண்டுவந்த மிகச்சிறந்த பத்திரிகையாளர் கலைஞர். இதுமட்டுமின்றி, சமத்துவத்திற்கான போராட்டம் என்பது முதன் முதலில் தமிழ்நாட்டில் பெரியார் வழி நடத்தி தொடங்கி வைத்தவர். உத்தர பிரதேசத்தில் ஒரே மாதத்தில் 2 ஆயிரம் கொலைகள், 2 ஆயிரம் பாலியல் வன்கொடுமைகள் நடந்தேறியுள்ளன. இது தான் பா.ஜ.க. அரசின் சாதனை என்பதை நாம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். உ.பியில் தலித் பெண் பாலியல் வன்கொடுமையால் கொலையுண்ட போது போலீசாரே சடலத்தை அவசரமாக புதைத்த சம்பவம் நாட்டையே உலுக்கியது.

**ராக்கி பிட்லன் ( ஆம் ஆத்மியின் டெல்லி துணை சபாநாயகர்):**

பெண்விடுதலைக்காகவும், பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் எண்ணற்ற தலைவர்கள் அரும்பாடுபட்டுள்ளனர். பல்வேறுதளங்களிலும் பெண்கள் தடைகளை உடைத்து இன்று முன்னேற்றம் கண்டு உள்ளனர். அதன்படி, அரசியலிலும், பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க கடுமையான போராட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. குறிப்பாக, பணியிடங்களில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக தொடர்ந்து நாம் போராட வேண்டியுள்ளது என்றார்.

---

## இந்த நாட்டின் பெண்களின் பலம்

# பிரதமர் மோடி ஆட்சியை மண்ணை கவ்வ வைக்கும்!

## மகளிர் உரிமை மாநாட்டில் பீகார் ஜனதா தள தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் – அமைச்சர் லெஷி சிங் பேச்சு!

சென்னை, அக். 17 –

இந்த நாட்டில் உள்ள பெண்களின் பலம், பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசை மண்ணை கவ்வ வைக்கும் என்று சென்னையில் நடைபெற்ற மகளிர் உரிமை மாநாட்டில் பேசிய பீகார் மாநில அமைச்சரும் ஜனதா தள தேசிய நிர்வாகக் குழு உறுப்பினருமான லெஷி சிங் குறிப்பிட்டார்.



அவரது உரை வருமாறு:–

முதலில், இந்த மகளிர் உரிமை மாநாட்டிற்கு வருகை தந்துள்ள அனைத்து சகோதரி களையும், ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க மாநாட்டில் கலந்துகொள்ள எனக்கு வாய்ப்பளித்த பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார் அவர்களுக்கும், ஐக்கிய ஜனதா தள தேசிய தலைவர் லாலன் சிங் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தன்னிகரற்ற தலைவராக மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்!**

என்னை தனிப்பட்ட முறையில் அழைத்து, இந்த மாநாட்டிற்கு அழைப்பு விடுத்த, நாட்டின் புகழ்பெற்ற பெண் தலைவரும், தி.மு.க.வின் நாடாளுமன்ற உறுப்பினருமான, சகோதரி கனிமொழி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐக்கிய ஜனதா தளம் சார்பில், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர், நம் நாட்டின் பெண் சக்தியின் சின்னமாக விளங்கும் அன்னை சோனியா காந்தி அவர்களையும், தமிழ்நாட்டின் தன்னிகரற்ற தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களையும், நாட்டின் பெண்களுக்கு பெரும் உத்வேகமாகத் திகழும் காங்கிரஸ் பொதுச் செயலாளர் சகோதரி பிரியங்கா காந்தி அவர்களையும், ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வர் மெகபூபா முப்தி அவர்களையும், மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் சுப்ரியா சுலே அவர்களையும், மரியாதைக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரி டிம்பிள் யாதவ் அவர்களையும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுபாசினி அலி அவர்களையும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுஷ்மிதா தேவ் அவர்களையும், இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தேசிய பொதுச் செயலாளர் ஆனி ராஜா அவர்களையும், புதுடெல்லி சட்டப் பேரவை துணை தலைவர் ராக்கி பிர்லா அவர்களையும் வரவேற்கின்றேன்!

சகோதரிகளே, “பெண்கள் எங்கு வழிபடப்படுகிறார்களோ அங்கே கடவுள் இருக்கிறார்” என்று கூறப்படுகிறது. பெண்கள் நாம் அனைவரும் சக்தி வாய்ந்தவர்கள். பெண்கள் இல்லாமல் மனித இனம் வாழ முடியாது. இத்தகைய பெண் சக்தியைப் போற்றும் வகையில், பீகார் முதலமைச்சர் நிதீஷ்குமார் அவர்கள் ஆட்சி அமைத்த பிறகு, 2006ல் ஊரக உள்ளாட்சியில் பெண்களுக்கு 50% இடஒதுக்கீடு அளித்து, 2007ல் அவர், நகராட்சித் தேர்தல்களிலும் 50% இடஒதுக்கீடு வழங்கினார். பீகாரில் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் நியமனத்திலும் பெண்களுக்கு 50% இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது. மாநிலத்தில் முதல் முறையாக மகளிர் காவல்படை உருவாக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் உள்ள 40 காவல் மாவட்டங்கள் மற்றும் 4 ரயில் மாவட்டங்களில், ஒவ்வொரு காவல் வட்டத்திலும் ஒரு மகளிர் காவல் நிலையம் நிறுவப்பட்டு, பெண்களுக்காக பல்வேறு நிலைகளில் மொத்தம் 647 பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பழங்குடியின பிரிவைச் சேர்ந்த பெண்களுக்காக “ஸ்வாபிமான் காவல்படை” உருவாக்கப்பட்டுள்ளது. கான்ஸ்டபிள் முதல் உதவி ஆய்வாளர் வரையிலான நேரடி நியமனத்தில் பெண்களுக்கு 35% இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை, காவல் துறையில் பெண்களுக்கு 12,360 பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ள நிலையில், 3,672 பெண் காவலர்கள், 29 பெண் காவலர் ஓட்டுநர்கள் என மொத்தம் 3,701 பெண்கள் காவல்துறையில் நியமிக்கப்பட்டுள்ளனர். அனைத்து அரசுப் பணிகளிலும், அனைத்துப் பிரிவுகளிலும், அனைத்து நிலைகளிலும், அனைத்து வகைப் பணிகளிலும் பெண்களுக்கு 35% இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

இப்போது ஒரு உதாரணம் சொல்கிறேன். மாநிலத்தில் மொத்தம் உள்ள 1,07,431 பஞ்சாயத் பதவிகளில், 63,974 இடங்களில் பெண்கள் வெற்றி பெற்றுள்ளனர். மொத்தம் உள்ள 38 மாவட்ட கவுன்சில் பதவிகளில், 29 பதவிகளை பெண்கள் வகிக்கின்றனர். மாநிலத்தில் 8058 மன்ற தலைவர்கள் உள்ளனர், இந்த 4209 பதவிகளில் பெண்கள் தலைவர்களாக உள்ளனர். பஞ்சாயத்து ராஜ் அமைப்பில் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கான இந்த உன்னத சிந்தனையை முதன்முதலில் பெற்ற மாண்புமிகு முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை இன்று நினைவுகூர விரும்புகிறேன். இன்று அவர் நம்மிடையே இருந்திருந்தால், நீண்ட காலத்திற்கு முன்பே பெண்களுக்கு நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடு கிடைத்திருக்கும்.

பீகாரில், எங்கள் முதலமைச்சர் நிதிஷ் குமார் அவர்கள், பெண்கள் அதிகாரம் பெறுவதற்கு வழிகாட்டு சக்தியாக திகழ்ந்து பல வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறார். அவர்களைப் பற்றிப் பேசத் தொடங்கும் ஒவ்வொரு முறையும் உணர்ச்சிகளால் நான் திணறுகிறேன். முதலமைச்சரின் பள்ளி மாணவிகள் சீருடை திட்டம், உதவித்தொகை திட்டங்கள், சைக்கிள் வழங்கும் திட்டம், பெண் குழந்தைகளுக்கான ஊக்கத் திட்டம், மாணவிகளுக்கான கடன் அட்டை திட்டம், முதலமைச்சரின் பெண் குழந்தைகள் நலத் திட்டம் போன்ற மகத்தான திட்டங்களை எங்கள் முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார்.

முதலமைச்சர் பெண் குழந்தை கள் மேம்பாட்டுத் திட்டம், லட்சுமிபாய் ஓய்வூதியத் திட்டம், முதலமைச்சர் மகளிர் சக்தித் திட்டம் போன்றவற்றால் பெண்கள் பெரிதும் பயனடைந்துள்ளனர். நலி வடைந்த பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக முதலமைச்சர் பெண் தொழில்முனைவோர் திட்டம் தொடங்கப்பட்டு, பெண்களுக்கு அரசு வேலைகளில் 35% இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலும் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெண்களுக்காக பல திட்டங்களைத் தொடங்கி வைத்தார். அவரைப் பின்பற்றி, தற்போதைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பெண்கள் வாழ்வில் மேம்படவும், கண்ணியம் நிறைந்த வாழ்க்கையை நடத்தவும் பல திட்டங்களை தீட்டியுள்ளார். ஒரு பக்கம் மறைந்த ராஜீவ் காந்தி அவர்கள், மறைந்த கலைஞர் அவர்கள், முதல்வர் நிதிஷ் குமார் அவர்கள், முதல்வர் ஸ்டாலின் அவர்கள், சோனியா காந்தி அவர்கள், இந்த நாட்டின் பெண்களின் முன்னேற்றத்திற்காகஎத்தனையோ துணிச்சலான நடவடிக்கைகளை எடுத்தவர்கள். ஆனால் ஒருபோதும் அவர்களின் சாதனைகளை அவர்கள் பறைசாற்றியது இல்லை. தங்கள் சாதனைகளை சந்தைப்படுத்த வேண்டும் என்ற தேவையை அவர்கள் உணர்ந்ததில்லை. அவர்கள் பெண்களின் மேம்பாட்டிற்கு முழுமையாக தங்களை ஈடுபடுத்தி கொண்டனர். ஆனால் மறுபுறம், பா.ஜ.க. ஆட்சியில் நரேந்திர மோடி பெண்களுக்கு எதுவுமே செய்யாமல், திட்டங்களுக்கு முத்திரை குத்துவதன் மூலம், அவர் தனக்கு புகழ் தேடிக் கொள்ள முயல்கிறார்.

**மோடி புகழ் பாடுவதாக மாறிவிட்டது!**

சமீபத்தில் பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. அரசால் கொண்டுவரப்பட்டது. இந்த மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப் படுவதை அனைத்துக் கட்சிகளும் உறுதி செய்தன. இதற்கு முன்பே, அன்னை சோனியா காந்தி அவர்களின் உறுதியான உதவியுடன், டாக்டர் மன்மோகன் சிங் தலைமையிலான அரசாங்கம் இந்த மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முயற்சித்தது. இந்த மசோதாவுக்கு இப்போது நாரி சக்தி என்று பெயரிடப்பட்டுள்ளது. ஆனால் அது மோடி புகழ்பாடுவதாக மாறிவிட்டது.

இந்த மசோதா நடைமுறைக்கு வர காலக்கெடு எதுவும் வழங்கப்படவில்லை. இந்த மசோதாவில் தாழ்த்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. ஆனால் மோடி அவர்கள் மற்ற பொய்களை போலவே இந்த மசோதாவின் வெற்றியில் தனது முதுகைத் தட்டிக் கொள்கிறார். பெண்களை வணங்குவதற்கு பதிலாக, மோடி அவர்கள் தன்னை வணங்க செய்கிறார். இந்த மசோதாவின் முக்கிய நோக்கம் அவரை வணங்குவது தான். அவர் அதில் வெற்றி பெற்றுள்ளார்.

திருமிகு சோனியா காந்தி அவர்களே, வரவிருக்கும் தேர்தலில் மோடியால் வெற்றி பெற முடியாது என்பதை நான் உறுதியாக கூற விரும்புகிறேன். நீங்கள், நிதிஷ் குமார் அவர்கள், ஸ்டாலின் அவர்கள், சரத் பவார் அவர்கள் மற்றும் இந்தியா கூட்டணியின் பிற முக்கிய தலைவர்கள் இணைந்து ஆட்சி அமைக்கும் போது மட்டுமே இந்த மசோதா வெளிச்சத்தைக் காணும்.

பெண்கள் இடஒதுக்கீடு மசோதாவில், “பீகார் மாதிரி” ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று நாங்கள் அனைவரும் விரும்புகிறோம். இதில், பெண்கள் மக்கள் தொகைக்கு ஏற்ப 50% இடஒதுக்கீடு பெற வேண்டும்.

இந்த மேடையில் , இந்த நாட்டின் பெண்கள் மற்றும் சகோதரிகளுக்கு நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். பெண்கள் எந்தத் துறையிலும் ஆண்களை விட பின்தங்கியவர்கள் அல்ல. ஆண்களை விட பெண்கள் நேர்மையாகவும் கடமையுணர்வுடம் திகழ்கிறார்கள். இன்று பெண்கள் அனைத்து துறைகளிலும் முன்னணியில் உள்ளனர். ஒரு பெண் வேறு குடும்பத்தில் பிறந்து முற்றிலும் மாறுபட்ட குடும்பத்தில் வாழ வருகிறாள். ஆனால் அதன்பிறகும் அவள் தன் நல்ல இயல்பு மற்றும் செயல்பாடுகளால் தன் புதிய குடும்பத்தை வளப்படுத்துகிறாள். பெண்கள் விண்வெளியை அடைந்துள்ளனர். அவர்களுக்கு தேவை வாய்ப்புகள்.

வாய்ப்பு கிடைத்தால், பெண்கள் எந்த வகையிலும் ஆண்களை விட தாழ்ந்தவர்கள் அல்ல அவர்களை விட திறமையானவர்கள்என்பதைநிரூபித்துள்ளனர். நாட்டின் முதல் பெண் பிரதமர் மறைந்த திருமிகு இந்திரா காந்தி ஒரு சிறந்த உதாரணம். தன் உறுதியால் இரும்புப் பெண்மணி என்ற பெயரைப் பெற்றார்.

இந்தியாவின் தலைவர்கள் நிதிஷ் குமார் அவர்கள், மேடம் சோனியா அவர்கள், பிரியங்கா அவர்கள், முதல்வர் ஸ்டாலின் அவர்கள், கனிமொழி அவர்கள், சுப்ரியா அவர்கள் மற்றும் பலர் இந்த நாட்டு பெண்களை முன்னேற்றுவதில், அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குதல் முன்னணியில் இருக்கிறார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். பண்டைய காலம் போல் அனைவருக்கும் இணையாக பெண்கள் வலுவாகத் திகழும் காலம் வெகு தொலைவில் இல்லை.

திருமிகு பிரியங்கா அவர்கள், திருமிகு கனிமொழி அவர்கள், திருமிகு சுப்ரியா சுலே அவர்கள், நீங்கள் அனைவரும் இணைந்து மாத்ரிவந்தன் பிரச்சாரத்தை தொடங்குங்கள், நாங்கள் அனைவரும் உங்களுடன் இருக்கிறோம், ஒவ்வொரு கட்டத்திலும் உங்களுடன் இருப்போம் என்று தாழ்மையுடன் கூறிக்கொள்கிறேன். நாட்டின் பெண்கள் உங்களை அழைக்கிறார்கள், நீங்கள் செய்ய வேண்டியது எங்களை வழிநடத்துவதுதான், நாங்கள் அனைவரும் உங்களுடன் இருக்கிறோம். இந்த நாட்டின் பெண்களின் பலம் நரேந்திர மோடியை மண்ணை கவ்வ வைக்கும். எனது முன்மொழிவை நீங்கள் அனைவரும் பரிசீலிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இறுதியாக, இங்கு வந்துள்ள அனைத்து பெண்கள் மற்றும் சகோதரிகளை எங்கள் முதலமைச்சர் மாண்புமிகு நிதீஷ் குமார் அவர்கள் சார்பாக வாழ்த்துகிறேன். பெண்களின் உரிமைகளுக்கான ஒவ்வொரு போராட்டத்திலும் அவர் சார்பாக அனைத்து உதவிகளையும் ஆதரவையும் வழங்க நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். இது அவரது வாழ்த்துச் செய்தி.

இப்படி ஒரு அற்புதமான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததற்காக மீண்டும் ஒரு முறை கனிமொழி அவர்களுக்கு நன்றி கூறுவதுடன், அன்னை சோனியா காந்தி அவர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் பெரியோர்கள் அனைவரது வாழ்த்துகளை எதிர் நோக்கி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு அவர் உரையாற்றினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.10.2023) தலைமைச் செயலகத்தில், இஸ்ரோ தலைவர் சோம்நாத் அவர்கள் சந்தித்தபோது, முதலமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.

# ஒடிசா முதல்வர் நவின் பட்நாயக் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, அக். 17–



ஒடிசா மாநில முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:–

**ஒடிசா முதலமைச்சர் நவீன்பட்நாயக் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள்! உங்கள் வாழ்வில் நிலையான மகிழ்ச்சியும் நல்ல உடல் நலனும் நிறைந்திருக்கட்டும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## நீலகிரி மாவட்டத்தில் 50 ஆண்டு கால கோரிக்கை நிறைவேற்றம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்த கூட்டுக்குடிநீர் பணிகள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு!

*உதகை, அக்.17-*

*நீலகிரியின் கடைக்கோடி கிராமமான கின்னக்கொரை, இரியசீகை கிராமங்களுக்கு நீண்ட நாள் பிரச்சினையான குடிநீர் பிரச்சினையை தீர்க்க அண்மையில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 5.45 கோடி மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர் திட்டத்தை அறிவித்தார்.*

*இத்திட்டப் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை நேரில் ஆய்வு மேற்கொண்டார்.*

*அப்போது 50 ஆண்டு கோரிக்கையை நிறைவேற்றி தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி செலுத்தும் வகையில் கிராம மக்கள் சார்பில், படுகர் மக்களின் பாரம்பரிய கலாச்சாரத்துடன் உற்சாக வரவேற்பு அளித்தனர்.*

*இயற்கை எழில் கொஞ்சும் நீலகிரி மாவட்டம் உதகையில் இருந்து சுமார் 55 கிலோமீட்டர் தொலைவில் ,அடர்ந்த வனப்பகுதியில் உள்ள கேரளா மாநிலம் எல்லையில் அமைந்துள்ளது கின்னக்கொரை மற்றும் இரியசீகை கிராமங்கள். இந்த கிராமங்களில் 700க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர் .*

*பசுந்தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக இங்குள்ள விவசாயிகள் மேற்கொண்ட ஒரு நிலையில் கடந்த 50 ஆண்டு காலமாக தங்கள் கிராமத்திற்கு முறையான குடிநீர் வசதி இல்லாததால் இங்கு வசிக்கும் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.*

*தங்கள் கிராமத்திற்கு முறையான குடிநீர் வசதி செய்து தர வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கிராம மக்கள் சார்பில் கடந்த வருடம் மலர் கண்காட்சிக்கு வந்த போது மனு அளிக்கப்பட்டது. இதனை தாய் உள்ளத்தோடு பரிசீலித்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உடனடியாக தங்கு தடை இன்றி கின்னக்கொரை மற்றும் இரியசீகை கிராம மக்களுக்கு ரூபாய் 5 கோடியே 45 லட்சம் மதிப்பீட்டில் சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் நிதி ஒதுக்கி உத்தரவிட்டார்.*

*இதனைத் தொடர்ந்து முக்கூறுத்தி தேசிய பூங்கா அடிவாரத்தில் உள்ள வராகப்பள்ளம் நீரோடையை நீர் ஆதாரமாகக் கொண்டு சுமார் 15 கிலோமீட்டர் தூரம் வனப்பகுதி வழியாக குழாய் அமைத்து கூட்டுக் குடிநீர் திட்ட இறுதி கட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது. இதனை சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சியர் மு.அருணா மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் நேரில் சென்று நடைபெற்று வரும் பணிகளை ஆய்வு மேற்கொண்டார். இதனைத் தொடர்ந்து அந்த கிராமத்திற்குச் சென்ற அமைச்சர் கா.ராமச்சந்திரன் மற்றும் அரசு அதிகாரிகளை கிராம மக்கள் தங்களது பாரம்பரிய கலாச்சாரப்படி உற்சாக வரவேற்பு அளித்தனர்.*

*இதனைத் தொடர்ந்து திட்டத்தை கொண்டு வந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கிராம மக்கள் சார்பில் அப்பகுதியை சேர்ந்த மக்கள் தங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்தனர். எதிர்வரும் மே மாதத்திற்குள் தடையில்லா குடிநீர் கிராமத்திற்கு சென்றடையும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

---

## திருப்பத்தூர் மாவட்டம்

# ஜோலார்பேட்டை தொகுதி வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

*திருப்பத்தூர், அக். 17 -*



*திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதி ஜோலார்பேட்டை நகரம், ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம், ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம், ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம், நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம், கந்திலி தெற்கு ஒன்றியம், திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம், நாட்றம்பள்ளி பேரூராட்சிக்குட்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) ஆலோசனை கூட்டம் இன்று (17.10.2023 செவ்வாய்க் கிழமை) காலை 9.00 மணியளவில் நாட்றம்பள்ளியில் உள்ள ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப் பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமையில் ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மு.ராஜகாந்தம், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை எம்.பி. ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்கள்.*

*அதுசமயம் ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நகர, ஒன்றிய, பேரூர்க் கழகச் செயலாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.*



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.10.2023) தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியக் கூட்டத்திற்கு வருகை தந்த மாற்றுத்திறனாளிகளிடம் கலந்துரையாடி அவர்களது தேவைகள் குறித்து கேட்டறிந்தார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா உள்ளார்.

திருப்பூர் மாவட்டத்தில் சாவடி மேற்கூரை இடிந்து விழுந்து

# உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக். 17 -

திருப்பூர் மாவட்டத்தில் சாவடி மேற்கூரை இடிந்து விழுந்து உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி நிதியுதவி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், கொழுமம் கிராமம், கொழுமம் - பழனி முதன்மைச் சாலையிலுள்ள சாவடியின் முகப்பு மேற்கூரை இன்று (16.10.2023) காலை எதிர்பாராதவிதமாக இடிந்து விழுந்ததில் முரளி ராஜா, த/பெ.மன்மதன் (வயது 35), கௌதம், த/பெ.சின்னதேவன் (வயது 29) மற்றும் மணிகண்டன், த/பெ.பாபு (வயது 28) ஆகிய மூவரும் பலத்த காயமடைந்து, அவர்களை உடுமலைப்பேட்டை அரசு பொதுமருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த மூவரையும் இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களது குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



சென்னை, சேப்பாக்கம், நேற்று (16.10.2023) ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் அலுவலக கூட்டரங்கில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தேர்வு செய்யப்பட்ட 29 இளநிலை உதவியாளர்களுக்கு பணியிட ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ.மதிவாணன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் க.லட்சுமி பிரியா, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குனர் எஸ்.அண்ணாதுரை, பொது மேலாளர் (நிர்வாகம்) பரிதா பானு ஆகியோர் உள்ளனர்.

## தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

## தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணிச் செயலாளர் டி.செங்குட்டுவன் அறிவிப்பு

(நான்காவது பட்டியல்)

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணியின் மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### கரூர் மாவட்டம்

**தலைவர்:** பி.செல்லமுத்து, 32, மலைநகர், வேலாயுதம்பா ளையம் அஞ்சல், புகளூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639117

**துணை தலைவர்:** ஆர்.சந்திரன், 131, வையாபுரி நகர், 2 வது தெரு, எல்.என்.எஸ்.அஞ்சல், கரூர் தாலுகா & மாவட்டம் - 639002 **அமைப்பாளர்** : சு.செல்வராஜ், 4/6, சிவசக்தி நகர், புன்னம் ஊராட்சி, புன்னம்சத்திரம் அஞ்சல், புகளூர் தாலுகா, கரூர் மாவட்டம் - 639136 **துணை அமைப்பாளர்கள்** : பி.வேலுச்சாமி, 23எ, வடக்கு தொட்டியப்பட்டி, பழையஜெயங்கொண்டம் அஞ்சல், கிருஷ்ணராயபுரம் தாலுகா, கரூர் மாவட்டம் - 639102 பி.தெய்வராசு (எ) தேவா, 157/1, எல்.ஜி.பி.நகர், கோவை ரோடு, செங்குந்தபுரம் அஞ்சல், கரூர் தாலுகா & மாவட்டம் 639002 ம.ஜெகநாதன், 165, ஆதிதிராவிடர் காலனி, குமாரமங்கலம், மேட்டு மருதூர் அஞ்சல், குளித்தலை தாலுகா, கரூர் மாவட்டம் - 639107 இ.சுதாகர், 14, கஸ்தூரி பாய் தெரு, வாங்கல் பழையூர், வங்கல் அஞ்சல், மண்மங்கலம் தாலுகா, கரூர் மாவட்டம் - 639116 கே.கே. சதீஸ்கண்ணன், 1415, அக்ரஹாரம், புலியூர் கஸ்பா, புலியூர் அஞ்சல், கரூர் தாலுகா & மாவட்டம் - 639114

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள்** : ஆர்.பி.லோகநாதன், 647, ராஜகிரி, விராலிமலை மத்திய ஒன்றியம், புதுக்கோட்டை - 621316 வ. சுப்பிரமணியன், மாந்தங்குடி,மணவிடுதி அஞ்சல், புதுக்கோட்டை தெற்கு ஒன்றியம், புதுக்கோட்டை. ராஜேந்திரன் 1321, கும்முப்பட்டி,முள்ளூர், புதுக்கோட்டை தெற்கு ஒன்றியம், கே.மூர்த்தி, திருமலைராயசமுத்திரம், கைக்குறிச்சி அஞ்சல். ஏ.டி.இளங்கோவன், மாங்கோட்டை, நம்பன்பட்டி, கும்மங்குளம் அஞ்சல், கறம்பக்குடி. மதியழகன், 20/1/1, சிவானந்தபுரம் 4 ஆம் வீதி மச்சுவாடி கே.ரமேஷ், மழையூர், கறம்பக்குடி தெற்கு, புதுக்கோட்டை சுகுணன், 37/2, போஸ் நகர், புதுக்கோட்டை

### தஞ்சை மாநகரம்

**தலைவர்** : எஸ்.தியாகராஜன், 122, ஆதிசேஷன், ரெட்டிப்பாளை யம் ரோடு, தஞ்சாவூர். **துணை தலைவர்:** ஆர்.ரூப்குமார், 1765, மேலலங்கம், தஞ்சாவூர். **அமைப்பாளர்:** கே.மனோகரன், பழைய ஹவுசிங் யூனிட், தஞ்சாவூர். **துணை அமைப்பாளர்கள்:** எஸ்.பழனிதுரை, அண்ணாநகர், சிவாஜி நகர் மேற்கு, தஞ்சாவூர். டி.எம்.ஆர்.கார்த்திகேயன், கங்காசந்து வடக்கு வீதி, தஞ்சாவூர். கே.செந்தில்குமார், 171, கொடிமரத்துமூலை, தஞ்சாவூர். ரா.லெட்சுமி நாராயணன், எம்.ஐ.ஜி முல்லை புதிய வீட்டு வசதி குடியிருப்பு, தஞ்சாவூர். எஸ்.மணிகண்டன், எ.ஒய்.நாடார் சாலை, கீழ் ரயன், தஞ்சாவூர்.

### விருதுநகர் வடக்கு மாவட்டம்

**தலைவர்** : மனோகரன், மானூர், உலக்குடி, நரிக்குடி.

**துணை தலைவர்** திருமாறன், பைபாஸ் ரோடு, விருதுநகர்.

### திருநெல்வேலி மத்திய மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள்** : எஸ்.பாலசுப்பிரமணியன், 18, குலசேகர ஆழ்வார் தெரு, பாளையங்கோட்டை. மு.குமாரவேல், 3/173, செல்வி அம்மன் கோயில் தெரு, சங்கர் நகர், திருநெல்வேலி. எஸ்.முருகன், எம்279, அன்பு நகர், மகாராஜா நகர், திருநெல்வேலி - 627011

### திருப்பத்தூர் மாவட்டம்

**துணை அமைப்பாளர்** : யு.ஆனந்த், 11, 3 கோயில் தெரு, ரெட்டிதோப்பு, ஆம்பூர்

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

**துணை அமைப்பாளர்கள்** : ஆர்.கரும்பாயிரம், அம்பேத்கர் நகர், சிங்காரப்பேட்டை, ஊத்தங்கரை ஒன்றியம், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆர். ஆறுமுகம், 5/244, திருவள்ளுவர் நகர், கிருஷ்ணகிரி ஜே.வாசு, திப்பம்பட்டி, பாளேதோட்டம் அஞ்சல், போச்சம்பள்ளி கிருஷ்ணகிரி

### புதுச்சேரி மாநிலம்

**தலைவர்:** எஸ்.எம்.எஸ். ஞுதர், எம்.ஏ., 21, ஜான்சி தெரு, இந்திராகாந்தி நகர், புதுச்சேரி - 605001. **துணைத் தலைவர்:** மு. லட்சுமணன் 69, திருக்காஞ்சி வீதி, வி.மணவெளி, வில்லியனூர், புதுச்சேரி - 605110. **அமைப்பாளர்** : ம. மதிமாறன் 3, கிழக்கு கடற்கரைச் சாலை, பாக்குமுடையான்பட்டு, புதுச்சேரி - 605008.

**துணை அமைப்பாளர்கள்** : த. ராமு 1, பாரதி தெரு, காட்டேரிக்குப்பம், புதுச்சேரி - 605502. கா. செல்வராஜ் (எ) குட்டி 26, வ.உ.சி. வீதி, கோட்டைமேடு, அரியாங்குப்பம், புதுச்சேரி - 605007. சு. உதயசூரியன் 1, தேசமுத்து மாரியம்மன் கோவில் தெரு, பாகூர் பேட், புதுச்சேரி - 607402. அ. அஜிபாஷா 6, கரிமேடு வீதி, சுப்பிராயப்பிள்ளை சத்தியம், கென்னடி நகர், புதுச்சேரி - 605001. ரா. லோகநாதன் 53, மாரியம்மன் கோவில் தெரு, சோலை நகர், முத்தியால்பேட்டை, புதுச்சேரி - 605003. கு. வெங்கடேசன் 9, சந்திரசேகர் வீதி, அய்யனார் நகர், புதுச்சேரி - 605013. ம. காத்தவராயன் 12, மேஸ்திரி தெரு, நெல்லித்தோப்பு, புதுச்சேரி - 605004. ஆ. ராஜாராம் 28, அனந்தபுரம் சாலை, அரியூர்பேட், புதுச்சேரி. கா. ஆறுமுகம் 9, கபேல் வீதி, வினோபா நகர், புதுச்சேரி - 605008.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 18.
நாள் : 13.10.2023

**டி.செங்குட்டுவன்**
செயலாளர்,
தி.மு.க. அமைப்புசாரா ஓட்டுநர் அணி

பெருநகர சென்னை மாநகராட்சி அறிமுகம் செய்துள்ள

# மகளிர் ஒப்பனை அறைகள் வாகனத்தை பராமரிப்பது அனைவரின் பொறுப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூகவலைதளத்தில் பதிவு!

சென்னை, அக். 17-

பெருநகர சென்னை மாநகராட்சி அறிமுகம் செய்துள்ள மகளிர் ஒப்பனை அறை வாகனத்தை பராமரிப்பது நம் அனைவரின் பொறுப்பு என்று குறிப்பிட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**பெருநகர சென்னை மாநகராட்சியால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள “She Toilet” எனும் இந்தப் பாராட்டத்தக்க முன்னெடுப்பைத் தூய்மையாகப் பராமரிப்பது நம் அனைவரது பொறுப்பு! அதனை உறுதிசெய்யுமாறு மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

# மகளிர் ஒப்பனை அறை வாகனங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி அறிமுகம் செய்துள்ள She - Toilet மகளிர் ஒப்பனை அறை வாகனம் தொடர்பாக, ‘பிங்க் கலரில் வந்த தோழி’ என்ற தலைப்பிலும், ‘மகிழ்ச்சியில் மாநகரப் பெண்கள்’ என்ற துணைத் தலைப்பிலும் வெளியான கீழ்க்காணும் கட்டுரையொன்றை இணைத்து தமது பாராட்டை பகிர்ந்துள்ளார்.






# 3-ம் ஆண்டு நினைவேந்தல்

மாண்புமிகு

**மா.சுப்பிரமணியன்** B.A., L.L.B.,

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர்

அவர்களின் இளைய மகன்

## சு.அன்பழகன்

நாள் : 17 – 10 – 2023

**தாய் தந்தையரின்
தியாக உணர்வை
பறைசாற்ற பிறந்தாயே...
எங்கள் அன்பகத்தின்
இதயங்களை ஏங்கவிட்டு
சென்றாயே... அன்பு!**

தீராத நினைவுகளுடன்...

அம்மா : **காஞ்சனா சுப்பிரமணியன்**

அண்ணன் : மருத்துவர் **சு.இளஞ்செழியன்**

அண்ணி : மருத்துவர் **கிரீத்தா செழியன்**

உறவினர்கள் மற்றும் நண்பர்கள்



நெஞ்சில் நிழலாடும் அன்பின் நினைவில்....

மடிப்பாக்கம் **சே.சிந்தன்**

துணைச் செயலாளர் – சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி தி.மு.க.

# தி.மு.க தேர்தல் அறிக்கைகள்:
# வீட்டுக்கு விளக்கு, நாட்டுக்குத் தொண்டன்!

■ நீரை.மகேந்திரன்





இந்திய அரசியல் கட்சிகளின் தேர்தல் வரலாற்றில், எந்தக் கட்சிக்கும் இல்லாத சிறப்பும், பெருமையும் கழகத்துக்கு உண்டு. அது, வெற்றி தோல்விகளைக் கடந்து இன்றளவும் பேசப்படும் ஆவணமாக உள்ள தேர்தல் அறிக்கை.

கழகம், முதல் தேர்தலை சந்தித்த காலத்தில் இருந்தே, ஒவ்வொரு சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தலின்போதும் அதிகமாக கவனிக்கப்படும் ஆவணமாக கழகத்தின் தேர்தல் அறிக்கை இருந்துள்ளது. ஏனென்றால், தமிழ்நாட்டின் தேவைகளை முன்னறிவிக்கும் நீண்டகாலத் தொலைநோக்குக் கண்ணோட்டம் கொண்ட சாசனமாக அவை திகழ்ந்துள்ளன.

பேரறிஞர் அண்ணா இருந்தவரை அண்ணாவின் முன்னெடுப்பிலும், வழிகாட்டலிலும் தேர்தல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதன் பின்னர் கலைஞரின் முன்னோக்கிய சிந்தனைகளைத் தேர்தல் அறிக்கைகளில் காணலாம்.

## நிபுணத்துவம் கொண்ட அறிக்கைகள்

1952-ஆம் ஆண்டு தமது கொள்கைகளுக்கு ஆதரவளிக்கும் வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரித்தனர் நமது முன்னோடிகள். அதன் பின்னர், 1957-ஆம் ஆண்டு முதன்முதலில் கழகம் தேர்தலில் நிற்கும்போது 'இதுதான் எங்கள் திட்டம்' எனத் தேர்தல் அறிக்கையை முன்வைத்து மக்களை சந்திக்கிறது கழகம்.

கழகம் தயாரிக்கும் தேர்தல் அறிக்கைகள் ஏனோ தானோ என்று இருப்பதில்லை. அண்ணா பொருளாதாரம் படித்தவர் என்பதுடன், மக்கள் மன்றத்தில் களப்பணி ஆற்றியவர் என்பதால், அவருக்கு தமிழ்நாட்டின் தேவைகள் தெரிந்து, நீண்டகால இலக்குகளை முன்வைக்கிறார். பெரும் நிபுணத்துவத்துடன் நமது முன்னோடிகள் தேர்தல் அறிக்கைகளில் பங்காற்றினர்.

'நாங்கள் இந்தத் திட்டத்துடன் தேர்தலை சந்திக்கிறோம் என இந்திய அளவில் முதன் முதலில் அறிவித்த கட்சி கழகம்தான்' என்கிறார் பேரறிஞர் அண்ணா. 1957-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலேயே ஒன்றிய அரசுக்கான அதிகாரம், அரசியல் சமத்துவம், ஒன்றிய அரசின் திட்ட நிதி ஒதுக்கீடுகளில் வடமாநிலங்களுக்குக் காட்டப்படும் முன்னுரிமை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டுகிறார்.

**'மாநிலங்களின் வேகமான வளர்ச்சியே, இந்தியாவின் வேகமான வளர்ச்சி' எனத் தனது கருத்தினை முன்வைக்கிறார் கலைஞர்.**

## செயலுக்கு வந்த கனவுகள்

விவசாய முன்னேற்றம், இந்தித் திணிப்பு, சம வேலைக்குச் சம ஊதியம், கடல் கடந்த தமிழர்கள் என எல்லாவற்றையும் அலசுகிறது 1957 தேர்தல் அறிக்கை.

"அறிவு வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட கல்விதான் மெய்யாகப் பயன்படும் கல்வியாகும். பெண்கள், சிறுகுழந்தைகள், ஊமைகள், செவிடர்கள், குருடர்கள் ஆகியோருக்கு அவரவர்க்கான கல்வி முறையில் கல்வி அளிக்கும் வசதிகள் விரிவாக்கப்பட வேண்டும். விஞ்ஞானத் தொழில்நுட்பக் கல்வி நிலையங்கள் தேவைக்கு ஏற்பப் பெருக வேண்டும்" என்கிற இலக்குகளை முன்வைத்தது 1957-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை. அந்த இலக்கு இன்று எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை உண்மைகளைத் தேடுவோர் அறிவர்.

"சமுதாயத்தில் புரட்சி இரண்டு வழிகளில் நிகழும். ஒன்று, மக்கள் ஒன்று திரண்டு ஆயுத பலத்தால் ஆட்சி அமைப்பது. மற்றொன்று, மக்கள் தங்கள் கையில் உள்ள வாக்குச் சீட்டு என்கிற பலத்தால் ஜனநாயகப் புரட்சி நிகழ்த்துவது. நாங்கள் இரண்டாவது வழியைத் தேர்ந்தெடுக்கிறோம்" என்று 1957-இல் அறிவித்தார் பேரறிஞர் அண்ணா. அந்த இரண்டாவது வழிக்காக கழகத்தின் பக்கம் மக்களை அணி சேர்த்தது தேர்தல் அறிக்கைகள் என்றால் மிகையில்லை. அவற்றின் மீது விவாதங்கள் நடைபெற்றுள்ளன. அவற்றை அரங்குகளில் பேசியுள்ளனர். அவற்றை பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதின. குறிப்பாக, தேசியக் கட்சிகள் பிரதி எடுக்கும் வகையில் அவை அமைந்திருந்தன. எப்போதும், எந்த மாநிலக் கட்சியும் கழகத்தின் அறிக்கைக்கு முகம் கொடுக்க முடியாமல் தடுமாற்றம் அடைந்தன. அடைகின்றன.

## வீட்டுக்கு விளக்கு நாட்டுக்குத் தொண்டன்!

'வீட்டுக்கு விளக்கு நாட்டுக்குத் தொண்டன்' என்கிற முழக்கத்தின் கீழ் 1962-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையை முன்வைத்தார் அண்ணா.

பள்ளிச் சிறார்களுக்குப் பகல் உணவு, படிக்கும் சூழ்நிலை சீரமைப்பு, சீருடைத் திட்டம் ஆகியவை குறித்து 1962-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை பேசுகிறது. வங்கிகள் தேசியமயம், அரசுப் போக்குவரத்து நாட்டுடமை, தனியார் துறை நிபுணர்கள் பொதுத்துறைக்கு வருதல், விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் என இன்றைக்கு நாம் எட்டியிருக்கும் உயரங்கள் எல்லாம் 1962-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வாக்குறுதிகளாக இருந்துள்ளன. அந்த வாக்குறுதிகளை படக்கதைகளாக வெளியிட்டது 'முரசொலி'.

பள்ளிகளில் விஞ்ஞான அறிவு, கட்டாயக் கல்வி, பிரதிநிதிகளைத் திரும்ப அழைத்துக் கொள்ளுதல் என்கிற வாக்குறுதிகளும் கழகத்தின் கம்யூனிச குரலாகப் பார்க்கலாம். "வீட்டுக்கு விளக்கு, நாட்டுக்குத் தொண்டன், தொண்டு வென்றிட, விளக்கு எரிந்திட கழகத்திற்கு வெற்றிகளைக் குவிப்பீர்கள்" என அந்த அறிக்கை முழங்கியது.

## சாதி ஒழிப்பும் மக்கள் ஒற்றுமையும்

சமுதாயத்தின் நிலவும் சாதிமுறைகளை ஒழித்து சாதிகளற்ற சமுதாயத்தைக் காண்பது என்கிற இலக்கினை ஒவ்வொரு தேர்தல் அறிக்கையிலும் கழகம் உயர்த்திப் பிடிக்கிறது.

மாநிலத்தில் ஆக வேண்டிய வழிகளுக்கு மட்டுமல்ல, ஒன்றிய அரசு செய்யவேண்டிய வேலைகளுக்கும் கழக அறிக்கை குரல் கொடுக்கிறது. 1967-ஆம் ஆண்டு தேர்தலின்போது அண்ணாவின் வழிகாட்டலுடன் தேர்தல் அறிக்கை வெளிவந்தது. "தயை தாட்சண்யம் இல்லாமல், கொள்கை இழக்கும் கோணல் வழி செல்லாமல், விடுதலை இயக்கம் எனும் இலக்கணத்தைப் பாழ்படுத்திக் கொள்ளாமல், ஆட்சி மன்றத்தில் உள்ள அரசியல் கட்சி மேற்கொள்ள வேண்டிய ஜனநாயகக் கடமைகளையும் நிறைவேற்றி, மீண்டும் பொதுமக்களின் ஆதரவை பெறுவதற்கான தகுதியையும் உரிமையும் பெற்று இருக்கிறது கழகம்" என அறிக்கை குறிப்பிட்டது.

> ”கழகத்தின் தேர்தல் அறிக்கைகள் தொடர்ச்சியாக சமூகநீதிக் கொள்கை, வறுமை ஒழிப்பு, மதச்சார்பின்மை, சாதி ஒழிப்பு, அடிப்படைக் கட்டமைப்புகளின் வளர்ச்சி, மாநில உரிமை, தொழில் வளர்ச்சி, ஆகியவற்றுக்குக் குரல் கொடுப்பவையாக இருந்துள்ளன. அதுதான் இன்றைக்கு வளர்ந்த மாநிலங்களின் வளர்ச்சிக் குறியீட்டில் தமிழ்நாடு முன்னிலையில் இருக்கக் காரணம். இவற்றைத் தேர்தல் அறிக்கைகளாக வெளியிட்டு மக்களைச் சந்தித்த கட்சி தி.மு. கழகம் மட்டும்தான் என்கிறார்” திட்டக்குழுவின் முன்னாள் துணைத் தலைவர் பேரா. நாகநாதன்.

அதற்குப் பின்னர் 1971 -ஆம் ஆண்டு தேர்தலில் இருந்து தேர்தல் அறிக்கைகள் கலைஞர் கைவண்ணமாகின்றன. 'மாநிலங்களின் வேகமான வளர்ச்சியே, இந்தியாவின் வேகமான வளர்ச்சி' எனத் தனது கருத்தினை முன்வைக்கிறார் கலைஞர்.

நாட்டின் வளர்ச்சித் திட்டமிடல், மாநிலத்தில் இருந்து ஆரம்பமாக வேண்டும் என வலியுறுத்துகிறார். அங்கிருந்து மாநிலத்துக்கு எனத் தனித் திட்ட கமிஷன் உருவாகிறது. ஒரு மாநிலக் கட்சி தேசிய அரசியலில் ஆதிக்கம் செலுத்துவது எப்படி என்பதற்கு கலைஞரின் நுட்பங்களை நாம் தொடர்ச்சியாக அலச முடியும். அவற்றைக் கழகத்தின் தேர்தல் அறிக்கைகள் வழி வாசிக்க முடியும். மாநில உரிமைக்கும் மக்கள் ஒற்றுமைக்கும், நீண்ட காலத் திட்டங்களுக்கும், சர்வதேச விவகாரங்களுக்கும்கூட கழகத்தின் தேர்தல் அறிக்கைகள் முகம் கொடுத்துள்ளன.

சமுதாய வளர்ச்சியுடன் கூடிய பொருளாதார வளர்ச்சி (GROWTH WITH SOCIAL JUSTICE) பொருளாதாரத்தில் சுயசார்பு (ECONOMIC SELF RELIANCE) ஆகியவற்றை 1977-ஆம் ஆண்டு தேர்தலின்போது முன்வைக்கிறார். பணக்காரர்களை மேலும் பணக்காரர்கள் ஆக்கும் (ELITE CONSUMPTION ORIENTED) என்கிற பொருளாதாரத்தை விமர்சனமாக முன் வைக்கிறது 1977-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கை. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது ஜவஹர்லால் நேரு முன்வைத்த சமூக வளர்ச்சிக் கொள்கையில் இருந்து ஒன்றியம் விலகும்போது அதை முன் வைக்கிறது கழகம்.

## நெருக்கத்தை உருவாக்கிய அறிக்கை

கழகத்தின் பிரதிபலன் பாராத நீண்ட காலத் தொண்டனைப் போல தேர்தல் அறிக்கைகள் பணியாற்றி வருகின்றன. அவற்றை விரிவாகத் தொடர்ச்சியாகப் பார்ப்பதனூடாக, கடந்த 2021-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையை நாம் தொட்டுப் பார்க்கலாம்.

நாம் ஏற்கெனவே அடைந்தவற்றில் இருந்து அடுத்தக் கட்டத்தைப் பேசியது கடந்த தேர்தல் அறிக்கை. அதிகபட்சமாகத் தமிழ்நாட்டின் அனைத்துத் தேவைகளையும் அலசியது அந்தத் தேர்தல் அறிக்கை என ஊடகங்கள் பேசின. 2021-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவற்றை நிறைவேற்ற வேண்டும் என்றால், ஒரு ஆட்சிக் காலம் போதாது எனப் பத்திரிகைகள் எழுதின.

மாவட்ட வாரியான தேவைகளை நிறைவேற்றும் வகையில் தேர்தல் அறிக்கை இருந்தது. கழகத்தின் அறிக்கையைப் படிக்கும் ஒருவர், அதில் அவரது ஊரின் பெயரைக்கூடப் படிக்க நேரும் என எழுதப்பட்டது. குறைந்தபட்சம் ஒவ்வொரு வாக்காளருக்கும் அவரைச் சுற்றியுள்ள ஐந்து கி.மீ. பரப்பளவின் நெடுநாள் பிரச்சினை, தேர்தல் அறிக்கையில் விவாதிக்கப்பட்டிருப்பது நெருக்கத்தை உருவாக்கியது. இந்தத் தேர்தல் அறிக்கையும் தமிழ்நாட்டின் வளர்ச்சியை இன்னும் பல படிகளுக்கு உயர்த்த உள்ளது.

....தொடரும்.

## திராவிட இயக்க இதழ்கள் - 'தமிழரசு'



1930-களில் சென்னையிலிருந்து வெளிவந்த மாத இதழ் 'தமிழரசு'. இதன் ஆசிரியர் மே.மாசிலாமணி முதலியார் ஆவார். 'ஒரு செந்தமிழ் மாத வெளியீடு' என்று அறிவித்து, 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன்' என்ற வரிகளை இதழின் முகப்பு அட்டையில் தாங்கி வந்தது.

இது ஆன்மிகம், இசை, சிறுகதை, சிறுவர் பகுதி, நகைச்சுவை, எள்ளல், நாடகம், திரைச் செய்திகள், விழிப்புணர்வு, விளம்பரம் எனப் பல்சுவைப் படைப்புகளை வெளியிட்டு வந்தது. ஆன்மிகத்தைப் பொறுத்த வரையில், வள்ளலார் சொன்ன கருத்துகளின் அடிப்படையிலான படைப்புகளை அது தாங்கி வந்தது.

பிரபல எழுத்தாளர் விந்தன், இந்த இதழில்தான் அச்சுக் கோப்பவராகப் பணியாற்றினார். பேரறிஞர் அண்ணாவின் முதல் கட்டுரையான 'பெண்கள் சமத்துவம்', 1931- ஆம் ஆண்டு இந்த இதழில்தான் வெளியானது. படத்தில் காண்பது, 1933-ஆம் ஆண்டு செப்டம்பர் 16-ஆம் தேதி வெளிவந்த இதழ் ஆகும்.

## :ப்ளாஷ்பேக்



### சொந்தக்காரர் பெரியார்!



திருப்பதி

காமராஜர் முதலமைச்சராக இருந்த 1956-ஆம் ஆண்டு எனது சித்தப்பா டி.என்.சோமசுந்தரம், தியாகராயர் நகரிலிருந்த நடேச அய்யர் தெருவில் (தற்போது, நடேசன் தெரு) ஒரு பழைய வீட்டை வாங்கினார். அதனால் சுற்றி இருந்தவர்களிடமிருந்து அவர் பல்வேறு சிக்கல்களையும் சந்திக்க நேர்ந்தது. அவர் சந்தித்த இன்னல்களை திராவிடர் கழகத் தோழர்கள் மூலமாக பெரியாருக்கும் தெரிவித்தார். பின்னர் ஒரு நாள் 25-க்கும் அதிகமான தி.க தொண்டர்களுடன் பெரியாரும் அன்னை மணியம்மையாரும் என் சித்தப்பா வீட்டுக்கு வருகை தந்தனர். 5-ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த நான், பெரியாரை என் சொந்தக்காரர் என்று நினைத்துக் கொண்டேன். அவரும் என் கையைப் பிடித்து நலம் விசாரித்தார். பெரியார் செல்லமாக வளர்த்த அல்சேஷன் நாயுடன் அன்றைக்கு நான் விளையாடிய நினைவுகள் எல்லாம் இன்றைக்கும் நெஞ்சில் நிழலாடுகிறது. பெரியார் வந்து சென்ற பிறகு சாதி ரீதியிலான எந்தப் பாகுபாட்டையும் என் சித்தப்பா அந்தத் தெருவில் சந்திக்கவில்லை என்பதை அடிக்கடி அவர் நினைவுகூர்ந்துள்ளார்.

**-திருப்பதி, பெரியார் பற்றாளர், தியாகராயர் நகர், சென்னை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கல்லூரியும் கல்வியும்

**1967-இல் தமிழகத்தில் இருந்த 109 கலை-அறிவியல் கல்லூரிகளில் இரண்டு மட்டுமே அரசுக் கல்லூரிகள். 1,31,093 மாணவர்கள் படித்தனர். கலைஞர் ஆட்சியில் [1969-1976] 68 கல்லூரிகள் தொடங்கப்பட்டன. 2010 - க்குள் 587 ஆக வளர்ந்தது. இதில் 62 அரசு கல்லூரிகள், 9 பல்கலைக்கழகக் கல்லூரிகள், 133 அரசு உதவிக் கல்லூரிகள், 383 சுயநிதிக் கல்லூரிகள். மாணவர்கள் - 7,09,162 .**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 272




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131